**SOUTHALL SHUTTERS** (NATIONWIDE)
Shop Front - Roller Shutter - Glass
*Shop Shutters * Remote Control Garage Shutters
*Van Shutters *Door Closers *Industrial Shutters
SALES - SERVICE - REPAIR
LEICHESTER - LONDON - BIRMINGHAM
Tel. Head Office: 020 8843 2235

FREE இலவசம்
The UDHAYAN
# உதயன்
Estd.: 1996
UK's No.1 National Tamil Newspaper

**WEDDING HALL for HIRE**
Hall suitable for Wedding, Birthday Parties, Meetings, Cultural Events, etc. Box Office Facility Availble, more than 500 seats, Standing+Sitting Capacity 600 people, newly furnished, I Floor, Car park, PA System, Kitchen, Water, Toilets, etc. For more details contact 020 8905 7775

e-mail: thelondon@udhayan.freeserve.co.uk | UN-34 Oct. 2003 | For News & Advertising: 020 8952 5677 | 16 பக்கங்கள்

# தமிழ்ப் பெண் குழந்தை ஆஷா கொலை !

## மணம் முடிக்காத தமிழ் தம்பதிகள் தடுப்புக்காவலில்

பிறந்து நான்கு வாரமே ஆன தமிழ்ப் பெண் குழந்தை ஆசா கொல்லப்பட்டு உள்ளார். இச்சம்பவம் தொடர்பாக அக்குழந்தையின் பெற்றோர் கைது செய்யப்பட்டு உள்ளனர். இச்சம்பவம் சவுத்தோலில் இடம்பெற்றது. இவ்வாண்டு யூலை 20ம் திகதி பிறந்த ஆசா நான்கு வாரத்தில் ஓகஸட் 16ம் திகதி மரணமானார். இம்மரணம் தொடர்பாக ஆசாவின் பெற்றோரான காந்தரூபன் முருகமூர்த்தி (26), தேவிகா சபாரட்ணம் (22) ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டனர். இவர்கள் மணமாகாதவர்கள் என்று தெரியவருகிறது.

சம்பவ தினம் அம்புலன்ஸ் வண்டி தலத்திற்கு அழைக்கப்பட்டது. அங்கு குழந்தை மரணமாகியதை அடுத்து நடுஇரவு பொலிஸார் அழைக்கப்பட்டனர்.

சவுத்தோல் மவுன்ற் அவனியூவில் குழந்தை ஆசா திடிரென மரணமானதை அடுத்து குழந்தைகள் பாதுகாப்புக் குழு - Child Protection Group ஒரு விசாரணையை மேற்கொண்டது. கிரேட் ஓமன்ற் ஸ்ரீற் மருத்துவமனையில் குழந்தை ஆசாவின் பிரேத பரிசோதனை ஓகஸ்ட் 19 அன்று இடம்பெற்றது. பிரேத பரிசோதனை அறிக்கை குழந்தை ஆசா நெரித்துக் கொல்லப்பட்டதாகத் தெரிவித்தது.

ஓகஸ்ட் 22ம் திகதி ஆசாவின் மரணம் தொடர்பாக காந்தரூபன், தேவிகா ஆகிய இருவரும் மவுன்ற் அவனியுவில் வைத்து கைது செய்யப்பட்டு கமசிமித் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். செப்ரம்பர் 15ம் திகதி மேற்கு இலண்டன் மஜிஸ்ரேட் நீதி மன்றத்தில் இவ்விருவரும் கொலைக்குற்றம் சுமத்தப்பட்டு நிறுத்தப்பட்டனர்.

இவர்கள் வழக்கு விசாரணை வரை தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு உள்ளனர். நவம்பர் மாதம் 10ம் திகதி மத்திய குற்றவியல் நீதிமன்றில் இவர்களது வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட உள்ளது.

# தாக்குதலுக்கு உள்ளான தமிழர் சில தினங்களில் மரணம்



சண்முகதாசன்

கிழக்கு இலண்டன் கையம்ஸ் பார்க்கில் தனது லோன்டிஸ் கடையை மூடிவிட்டு வீட்டுக்கு திரும்ப ஆயத்தமான தில்லைநாதன் சண்முகதாஸ் தாக்குதலுக்கு உள்ளாகி சில தினங்களில் மரணமானார். ஒக்ரோபர் 11 இரவு 9:30ற்கும் 11:00க்கும் இடையே கையம்ஸ் பார்க்கில் உள்ள தனது கடைக்கு அருகில் வைத்து தாக்கப்பட்டு உள்ளார். இரு நாட்களின் பின்னர் மீண்டும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ஒக்ரோபர் 14ம் திகதி இவர் உயிர் நீத்தார்.

தனது இருபதுக்களின் நடுப்பகுதியில் உள்ள வெள்ளையின இளைஞனை இத்தாக்குதல் தொடர்பாக பொலிஸார் தேடுகின்றனர். ஆனால் இத்தாக்குதலுக்கும் சண்முகதாசனின் மறைவிற்கும் தொடர்பு இல்லை என்றும் அவருடைய மரணம் இயற்கையானது என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இத்தாக்குதலை இனவாதத் தாக்குதலாக பொலிஸார் கருத்வில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மிஸ்ற்றர் லோண்டிஸ் என அப்பகுதியில் அறியப்பட்ட சண்முகதாஸ் அனைவருடைய அன்பையும் நன் மதிப்பையும் பெற்றிருந்தார். அவரது மறைவை அடுத்து சம்பவ இடத்தில் மலர்கள் வைக்கப்பட்டுள்ளதுடன் இரங்கள் அட்டைகளும் அக்கடையில் கொடுக்கப்பட்டது. ரவி ராஜரட்ணம் தனது சகோதரரின் குடும்பத்திற்காக வியாபாரத்தை தற்போது கவனிக்கிறார். சண்முகதாஸ் அனைவருடனும் அன்பாகப் பழகுவார் அவருக்கு நிறைய நண்பர்கள் உண்டு என்று தெரிவித்தார் ரவி. ரெட்பிறிஜ், கிளேகோல் பகுதியில் வாழ்ந்த 9 வயதுக் குழந்தையின் தந்தையான இவர் சாவகச்சேரி மீசாலையை பிறப்பிடமாகக் கொண்டவர்.

ஆண், பெண் சோடியாக வந்தவர்கள் இவருடன் வாக்குவாதப்பட்டதாகவும் அதனைத் தொடர்ந்து அந்த ஆண் சண்முகதாசை தாக்கி உள்ளார். கடைக்குள் இருந்தவர் பொலிஸாருக்கும் மருத்துவ வண்டிக்கும் தகவல் கொடுத்தார். விப்ஸ்குறொஸ் மருத்துவமனையின் அவசர பிரிவுக்கு கொண்டு செல்லப்பட்ட சண்முகதாஸ் மருத்துவ பரிசோதணைகளின்

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

Subscribe Udhayan only £10 p.a.

**BIRDY & CO** Solicitors
Legal Aid + Private
Immigration
Criminal
Landlord & Tenant
Matrimonial
Personal Injury
Civil Litigation
Conveyancing
Tel: 020 8900 9112
Emergency: 07802 436120
606B High Road
Wembley, Middx. HA0 2AF

The International **Wood Floor Centre**
Laminate Flooring available in 6 colours
£5.95 per sq.m + VAT only or Fully Fitted £24.95 + VAT
Engineered Floors £14.99 + VAT only
Solid Oak Floor £23.50 + VAT only
Free Estimates, Site Surveyor & Free Delivery
Open 7 Days Tel: 020 8951 4395 - 4495 Fax: 020 951 4251
21 North Parade, Mollison Way, Edgware HA8 5QH
www.internationalwoodfloor.co.uk

**C & S** DISCOUNT STORE
BABY AND CHILDRENS' WEAR SPECIALISTS
UP TO £5 OFF
ON PRODUCTION OF THIS COUPON
Spend £25 and get £1 off
Spend £50 and get £2 off
Spend £75 and get £3 off
Spend £100 and get £5 off
Offer lasts upto 31/12/03
714, Kenton Road, Kingsbury
111, Broadway Southall

Creative Curtains (LONDON) Ltd.
Made to Measure Service for Curtains & Blinds
Contact Dee Dee
Tel: 020 8574 2156
Mobile: 07780 572 429
15 Witley Ind. Est. Witley Gardens, Southall UB2 4EZ

**Park Royal Cash & Carry**
We are specialists in WINES, BEER, SPIRITS & SOFT DRINKS
Opening Offers: Very special DISCOUNTS for our New & Old Customers
* All Credit Cards accepted
* Free Delivery
* Open 7 Days
Call us on Tel: 020 8838 2233
Fax: 020 8838 0555
29/31, Minerva Road, Park Royal, London NW10 6HJ

Man & Co Estate Agents
Specialists in Sales, Lettings and Financial Services.
Vendors : Properties required for the areas covered by us, competitive commission rates!
We service the London borough of Brent, Harrow, Ealing, Barnet, Hammersmith, Fulham and the Westminster regions.
Landlords : We Offer Guaranteed rent and free management services!
Tenants : Find a suitable accomodation to suit your needs!
உங்கள் வீடுகளை தரமான விலையில் விற்கவும், வாங்கவும், வாடகைக்கு விடவும் ஒழுங்கு செய்து தரப்படும்.
Mortgage எடுக்க கடினமாக உள்ளதா? எந்தவித சூழ்நிலையிலும் எதுவித தடங்கலும் இல்லாமல் செய்து தரப்படும்.
பகுதி நேரம் வேலை பார்ப்பவர்களுக்கும் வேறு நாடுகளில் இருந்த வண்ணம் இங்கு வீடுகள் கடைகள் வாங்க விரும்புவர்களுக்கும் குறைந்த deposit உடன் ஒழுங்குகள் செய்து தரப்படும்.
3 Fryent Way, Kingsbury, London, NW9 9ER. 020 8206 9930

TRADE DISCOUNT WAREHOUSES
Craz'zy Prices
MS Mastersupplies
DS Directsupplies
MF Marblefrist
Tiles, Marble, Kitchen, Bathroom, Woodenflooring
Tel: 0208 961 7003 Fax: 0208 961 7039

# தாக்குதலுக்கு உள்ளான...

பின்னர் வீட்டுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் அவரது பேச்சில் மாறுதல் ஏற்படவே ஈஸ்றகாமில் உள்ள பொதுமருத்துவர் மகேந்திரனிடம் காண்பிக்கப்பட்டதாக துக்கத்தில் கலந்து கொள்ளச் சென்ற குடும்ப நண்பர் உதயனுக்குத் தெரிவித்தார். அடிபட்டதில் ஏற்பட்ட பயத்தினால் இவ்வாறு ஏற்பட்டு இருக்கலாம் என பொது மருத்துவர் தெரிவித்து உள்ளார். ஒக்ரோபர் 14 அன்று அவர் மயக்கமுற்று விழுந்ததை அடுத்து மீண்டும் விபஸ்குறொஸ் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். பிரத்தியேக சிகிச்சை அறையில் அவர் சேர்க்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டது. அங்கு அவர் கோமாநிலையை அடைந்தார். அதனை அடுத்து உயிர் வழங்கும் சாதனத்திற்கு இணைக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டது.

மூளைப்பகுதியில் ஏற்பட்ட இரத்தக் கசிவினால் அவருக்கு இந்நிலை ஏற்பட்டதாக மருத்துவ அறிக்கை தெரிவிக்கிறது. மூளையில் ஏற்பட்ட அந்த இரத்தக் கசிவினால் மூளை மிகவும் பாதிக்கப்பட்டதால் அவர் கோமாநிலையில் இருந்து மீண்டாலும் இயல்புநிலைக்கு திரும்ப இயலாது (Brain Dead) என மருத்துவர்கள் தெரிவித்ததை அடுத்து ஒக்ரோபர் 16ம் திகதி 12:30 க்கு அவருக்கு உயிர் வழங்கிக் கொண்டிருந்த சாதனம் நிறுத்தப்பட்டு அவர் உயிரிழந்தார்.

அவரது மரணம் இயற்கையானது என்றும் மூளையில் ஏற்பட்ட பாதிப்பினால் Cerebral Haemorrhage மரணம் சம்பவித்ததாகவும் பிரேத பரிசோதணை தெரிவிக்கின்றது.

இச்செய்தி அச்சுக்கு போகும் வரை அவரது உடல் குடும்பத்தவர்களிடம் ஒப்படைக்கப்படவில்லை.

# ஸ்கொட்லன்ட்யாட் - தமிழ் பிரதிநிதிகள் சந்திப்பு



Deputy Chief Superintendent
**Andrew Murphy**

தமிழ் இளைஞர் குழுக்களிடையே ஏற்பட்டுள்ள வன்முறையைக் கட்டுப்படுத்த ஸ்கொட்லன்ட்யாட் தமிழ் பிரதிநிதிகளுடன் ஏற்பாடு செய்த சந்திப்பு செப்ரம்பர் 17ல் றடிசன் எட்வேறியன் ஹொட்டலில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில் Deputy Asst Commissioner Stephen House, Det.Chief Superintendent Andrew Murphy, குற்றவியல் புலனாய்வு நிபுணர் ஆன்டி பார்க்கர், தமிழ் பொலிஸ் அலுவலர் ராஜன், ரெட்பிரிஜ் பொலிஸ் அதிகாரி, சமூக பொலிஸ் அலுவலர் பிலிப்பெரி என பத்திற்கும் மேற்பட்டவர்கள் பொலிஸ் தரப்பில் இருந்து கலந்து கொண்டனர். தமிழ்த் தரப்பில் ஆலயப் பிரதிநிதிகளும் சமூக அமைப்புகள் சிலவற்றின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். தமிழ் ஊடகங்களின் சார்பில் உதயன் மட்டுமே கலந்து கொண்டது. பி பி சி தமிழோசை ஆனந்தியும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.

தமிழர்கள் கடின உழைப்பாளிகள், கல்வி சார்ந்தவர்கள் என்று குறிப்பிட்ட DAC Stephen House, 150 பேருக்கும் குறைவான இளைஞர்களே இந்தக் கொடிய வன்செயலில் ஈடுபடுவதாகக் கூறினார். ஒப்பிரேசன் என்வர் பொலிஸ் நடவடிக்கையால் இந்த இளைஞர் குழுக்கள் சிதறுண்டு போயுள்ளதாகவும் தாங்கள் குறிப்பிடத்தக்க அளவு வெற்றி பெற்றதாகவும் அவ்வதிகாரி தெரிவித்தார்.

### ஒப்பிரேசன் என்வர்:

ஒப்பிரேசன் என்வர் பற்றித் தெரிவித்த ஸ்ரீபன் ஹவுஸ், இந்நடவடிக்கை புலனாய்வை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதாகக் குறிப்பிட்டார். தகவல் சேகரிப்பு, சம்பந்தப்பட்டவர்களை அடையாளம் காண்பது, சம்பந்தப்பட்டவர்களின் தங்குமிடங்களை அடையாளம் காண்பது என்ற வெவ்வேறு நிலைகளில் செயற்பட்டு இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகக் குறிப்பிட்டார். இதற்கு மேலும் விளக்கமளித்த DCS Andrew Murphy இவர்கள் மேற்கொண்ட குற்றங்கள் பற்றிய வரலாறு சேகரிக்கப்பட்டு தொகுக்கப்பட்டதாகக் குறிப்பிட்டார். கைதிகள் அனைத்தும் தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாக அவ்வதிகாரிகள் உறுதியுடன் தெரிவித்தனர்.

ஒப்பிரேசன் என்வர் நடவடிக்கையில் ஐவர் கொலைக் குற்றத்திற்காகவும், 18 பேர் மட்டை மோசடியிலும், ஒருவர் துப்பாக்கி வைத்திருந்ததற்காகவும் 19 பேர் சட்டவிரோதமாக நாட்டில் தங்கி இருந்ததற்காகவும், இருவர் தேடப்பட்டு வந்தவர்கள் என்ற அடிப்படையிலும் கைது செய்யப்பட்டனர். 140 வங்கிக் கணக்குகளில் 200 கிறடிற்காட்கள் பொலிஸாரிடம் சிக்கியது. £15,000 பெறுமதியான மின் உபகரணங்களும் சிக்கியது.

### அரசியல் தஞ்சமும் - பொலிஸ் நடவடிக்கையும்:

தமிழர்கள் பலர் அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் சட்ட விரோத குடியேற்றவாசிகள் என்ற அடிப்படையில் இந்த ஒப்பிரேசன் என்வர் நடவடிக்கையில் இறங்கி இருப்பது சந்தேகத்திற்கு உரியது எனத் தெரிவித்தார் தமிழர் தகவல் நடுவ சட்டத்தரணி கணநாதன். அதற்கு பதிலளித்த DAC Stephen House தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்கள் எல்லோரும் குற்றச் செயலில் ஈடுபடவில்லை என்றும் கைது செய்யப்பட்டவர்கள் எல்லோரும் தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்களும் அல்ல என்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஸ்கொட்லண்ட்யாட் குடிவரவு விடயங்களுக்காக ஒப்பிரேசன் என்வர் நடவடிக்கையை ஆரம்பிக்கவில்லை

# உதயன் பற்றி...

கடந்த 8 வருடங்களாக வெளிவரும்; அதிக பிரதிகளுடன் பரந்த விநியோகத்தைக் கொண்ட; தமிழ் மக்களின் ஒரே சமூகப் பத்திரிகை உதயன். தமிழ் சமுதாயத்திற்கு பயன் உள்ள வகையில் சமூக நோக்குடன் தேசிய அளவில் வெளியிட்டுக் கொண்டிருக்கும் ஒரே தேசிய பிரித்தானிய செய்தி தமிழ் பத்திரிக்கை பற்றி உங்களுக்கு...

பல்லாயிரம் வாசகர்களின் நன்மதிப்பையும் பாராட்டுக்களையும் பெற்ற உதயனை இலவசமாக வாசிக்க அளிப்பவர்கள்:


டாக்டர். இரவிக்குமார் (சற்குரு சுவாமிகள்)
நிறுவனர்-ஆசிரியர்


அன்னை காயத்ரி
நிறுவனர்-துணை ஆசிரியர்


திரு.த.புஷ்பலிங்கம்
விளம்பர பொறுப்பாளர்


திரு.த.ஜெயபாலன்
தலைமை நிருபர்


ர கொன்ஸன்ரைன்
செய்தி ஆய்வு நிருபர்

துணை நிருபர்கள் :
கே அரவிந்தன் (இலண்டன்)
ஜெ வெற்றிச்செல்வன் (இலண்டன்)
கா சாந்தி (இலண்டன்)
கெ பாலன் (ஐரோப்பா)
வி அருள் (கனடா)
இ சுரேஸ் (கனடா)

மற்றும் :
புலனாய்வு நிருபர்கள், விநியோகஸ்தர்கள்

உதயன் : அதிக பிரதிகளை பிரசுரிக்கும் பரந்த விநியோகத்தைக் கொண்ட தமிழ் மக்களின் ஒரே சமூகப் பத்திரிக்கை.

தொடர்புகளுக்கு: Global News Media **GNM (PVT) LTD.**, 25-27 High St., Edgware, Middx. HA8 7EE **Tel: 020 8952 5677**

**உதயன் நடுநிலைமையை கொண்ட மக்களின் நண்பன். உதயன் எப்பொழுதும் உண்மைகளை மட்டுமே ஒருசார்பற்றமுறையில் பேதமின்றி உண்மைகளை வெளியிடும் ஒரே பத்திரிக்கை.**

ACTON TRAINING CENTRE
FREE TRAINING
for people who live or work in West London
Do you know anyone who needs help with the following:
ENGLISH (ESOL)
LITERACY
NUMERACY
IT COMPUTER SKILLS
NVQ certificate in IT
Tel: 020 8992 4144
email: info@atc-uk.com
Swarn House, 296 High Street, Uxbridge Road, Acton, London W3 9BJ
Part Funded by European Union through the European Social Fund

**Restaurant FOR SALE**
Restaurant with full on licence
Next to Tube Station
Within residential area
V.good location
Long Lease
CALL TONI **07973 503836**

Excellent position
**Double Unit Vegetarian Restaurant for Sale**
658/660 Kingsbury Road,
London NW9 9HN
Call Yogi
**07811 275522**

The UDHAYAN உதயன்
**ADVERTISE FOR BEST RESULTS**
020 8952 5677

*Katherine & King's College of London*
Minavil House, Ealing Road, Wembley HA0 4EL
* Excellent Location: opposite Alperton Tube Station, good transportation links
* Multi-Disciplines: Accounting, Management, Computer, English
* Various Levels: From Certificate to Degree suitable for anyone over 16.
* Flexible Payment Options: Ten Monthly Instalments
* Diverse Study Modes: Full-time, Part-time (Daytime, Evening, Weekend.)
* Starting Date Available All Year Round
Please call 020-8795 1600 for more......
Monday – Friday (9am – 6pm)

பிறந்தநாள் மற்றும் சிறு விளம்பரங்களுக்கு
020 8952 5677

**CAM Carpets & Furnitures**
NEWLY OPEN Offers Tel: 8903 7350
BUDGET BED £ 59
ORTHOPAEDIC BED £ 89
Italian DINING Set + 6 Chairs & CARPETS £ 535
We can beat any quote
424, HIGH ROAD, WEMBLEY

## தமிழ் பிரதிநிதிகள் ...

என்றும் ஆனால் கைது செய்யப்பட்டவர்கள் வதிவிட உரிமையைப் பெற்றிருக்காவிட்டால் தாங்கள் குடிவரவு அதிகாரிகளுடன் இணைந்து செயற்பட வேண்டி உள்ளதாகவும் தெரிவித்தார். இதன் போது கருத்துத் தெரிவித்த குற்றவியல் புலனாய்வு நிபுணர் ஆன்டி, அரசியல் தஞ்சத்தை துஸ்பிரயோகம் செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் இல்லையேல் உண்மையில் தஞ்சம் கேட்பவர்களை இவர்களது செயல்கள் பாதிக்கச் செய்யும் என்று தெரிவித்தார்.

### வன்முறையாளர்களும் சமூகத்தில் ஒரு பகுதி:

வன்முறையில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் தமிழ் சமூகத்தில் இருந்து அன்னியப்பட்டு உள்ளதாகவும் ஆனால் அவர்களது நடவடிக்கைகள் பண்பட்ட அமைதி வாழ்வு வாழும் தமிழ் சமூகத்தினையும் பாதிப்பதாக கருத்துக்கள் வெளியிடப்பட்டது. நாம் விரும்பியோ விரும்பாமலோ இந்த இளைஞர்களும் சமூகத்தின் ஒரு பங்கு, அவர்கள் தமிழர்கள் மத்தியில் தான் வாழ்கிறார்கள். வேலை செய்கிறார்கள். ஆகையால் இப்பிரச்சினைக்கு சமூகமட்டத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் உதயன் நிருபர் தெரிவித்தார்.

தங்கள் அமைப்பிற்கு நிதி ஒதுக்கப்படுமானால் அதனூடாக இந்த இளைஞர்களுக்கு மறுவாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என இலண்டன் தமிழ் சங்கப் பிரதிநிதி மாலதி அங்கு கருத்துத் தெரிவித்தார்.


இந்த இளைஞர்களின் வன்முறையைக் கட்டுப்படுத்துவதில் இலங்கைப் பொலிஸாரின் உதவியைப் பெறுவதை தமிழ்த் தரப்பினர் முற்றிலும் நிராகரித்தனர். பொலிஸார் இந்த வன்முறையாளர்களுக்கு எதிரான துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள் ஆகியவற்றை தமிழில் செய்ய வேண்டும் எனவும் தமிழ் ஊடகங்களை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும் என்றும் அங்கு கருத்துக்கள் வெளியிடப்பட்டது.

### ஆலயங்களின் பங்களிப்பு:

ஆலயங்கள் இந்த வன்முறையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் எப்படி செயற்படப்போகின்றன என்பது பற்றியும் கருத்துக்கள் வந்தது. ஆலயங்களில் பொலிஸ் துண்டுப் பிரசுரங்களை வைக்கலாம், மக்களை பொலிஸாருடன் ஒத்துழைக்கும் படியான விண்ணப்பங்களை வைக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. அப்போது கருத்துத்தெரிவித்த ரூற்றிங் முத்துமாரி அம்மன் ஆலயத் தலைவர் சீவரட்ணம் ஆலயங்களுக்கு இந்த இளைஞர்கள் வருவதில்லை என்றும் ஆலய நிர்வாகம் பொலிஸ் நடவடிக்கையில் உதவ முடியாது என்றும் தெரிவித்தார்.

ஸ்கொட்லண்ட்யாட் தமிழ் பொலிஸ் விடயங்களில் தங்களுக்கு ஆலோசனை வழங்க ஒரு குழுவை அமைக்கப் போவதாகத் தெரிவித்தனர். அக்குழுவில் இடம்பெற அங்கு வந்த பலரும் விருப்பம் தெரிவித்தனர். அதனால் மற்றுமொரு சந்திப்பின் மூலம் ஒரு சிறிய குழுவை அமைக்கத் திட்டமிடப்பட்டது.

# கொலையாளிகளுக்குத் தண்டனை ஆரம்பம்




சுட்டு கொல்லப்பட்ட சுரேஷ்குமார் செல்வராஜா


ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட ராகுல் சச்சிதானந்தன்(26) நாகராசா சிவக்குமார்(33) ஆகிய இருவரும் செப்ரம்பர் 26ம் திகதி முதல் தண்டனைக் காலத்தை ஆரம்பித்தனர். இதில் சம்பந்தப்பட்ட ஏனைய மூவரும் 17 ஒக்ரோபரில் தங்கள் தண்டனையை ஆரம்பித்தனர். ஏப்ரல் 22, 2002ல் வெம்பிளியில் சுரேஸ்குமார் செல்வராஜாவை (27) கொலை செய்ததற்காக இருவருக்கும் ஓகஸ்ட் முற்பகுதியில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. இவ்விருவருடனும் திருராஜா கனகநாயகம்(26), விஜய் குமாரவேல்சிங்கம்(31) உட்பட மூவருக்கு கொலை முயற்சியில் ஈடுபட்டமைக்கும் வன்செயலில் ஈடுபட்டமைக்கும் தண்டனை விதிக்கப்பட்டது.

இக்கொலை வழக்கு தொடர்பான விசாரணையை டிசிஐ ரிச்சட் பிறிமன் மேற்கொண்டிருந்தார். இவருடைய பேட்டி கடந்த ஆண்டு உதயனில் வெளியானது குறிப்பிடத்தக்கது.


### குற்றவாளிகளும் குற்றங்களும் :




ராகுல்பெருமான் சச்சிதானந்தன் - (பிறப்பு:23-04-1976) - Brentvale Ave, Alperton.
சுரேஸ்குமார் செல்வராஜாவைக் கொலை செய்தது.
பார்த்தீபன் பரமலிங்கத்தை கொலை செய்ய முயற்சி செய்தது.
சின்னையா சதாசிவத்தைக் கடத்தியது.



நாகராசா சிவக்குமார் - (பிறப்பு:21-11-1969) - Northchurch Rd, Wembly.
சுரேஸ்குமார் செல்வராஜாவைக் கொலை செய்தது.
பார்த்தீபன் பரமலிங்கத்தை கொலை செய்ய முயற்சி செய்தது.



திரோஜன் கனகநாயகம் - (பிறப்பு:14-07-1977) - Beresford Ave, Wembly.
வன்முறையில் ஈடுபட்டு ஒழுங்கு முறையை குழப்பியது.
பார்த்தீபன் பரமலிங்கத்தை கொலை செய்ய முயற்சி செய்தது.



விஜயதரன் குமாரவேல் - (பிறப்பு:02-03-1972) - Rush Grove Court, Rush Grove Ave, Colindale.
வன்முறையில் ஈடுபட்டு ஒழுங்கு முறையை குழப்ப காரணமாகியது.



ஸ்ரானிஸ்லாஸ் கிருஷ்ணபிள்ளை - (பிறப்பு:24-02-1967) - Church Lane Rd, Wembly.
வன்முறையில் ஈடுபட்டு ஒழுங்கு முறையை குழப்ப காரணமாகியது.
பாரதூரமான உடற்காயத்தை ஏற்படுத்தியது.

### பின்னணி:

அரியாலை - மன்னார் பகுதிகளைச் சேர்ந்த இளைஞர் குழுக்களிடையே ஏற்பட்ட கோரமான மோதல் சுரேஸ்குமார் செல்வராஜாவின் கொலையில் முடிந்தது. மன்னாரைச் சேர்ந்த பார்த்தீபன் பரமலிங்கம் அரியாலையைச் சேர்ந்த ஒருவரின் கொலையில் சம்பந்தப்பட்டு கைது செய்யப்பட்டார். ஆனால் பின்னர் குற்றம் சுமத்தப்படாமல் விடுவிக்கப்பட்டார். அதனால் அரியாலை கோஸ்டியினர் ஆத்திரம் கொண்டு பழி தீர்க்கும் தாக்குதலுக்கு காத்திருந்ததாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. சம்பவதினமான ஏப்ரல் 22, 2002 அன்று பார்த்தீபன் பரமலிங்கம் வீட்டிற்குச் சென்று அவரை கொலை செய்யத் திட்டமிட்டு இருந்தனர். ஆனால் பாரத்தீபன் அங்கு இல்லாததால் மைத்துனர் சுரேஸ்குமார் செல்வராஜாவை சுட்டுக் கொன்றனர்.

### TAMIL HOTLINE - 0800 587 2935

தமிழ் இளைஞர் குழுக்களிடையே மீண்டும் வன்முறை மோதல்கள் அதிகரித்ததைத் தொடர்ந்து ஸ்கொட்லண்ட் யாட்டினால் TAMIL HOTLINE ஏற்படுத்தப்பட்டு உள்ளது. இத்தொலைபேசி இணைப்பிற்கு Operation Enver Hotline எனப் பெயரிடப்பட்டு உள்ளது. இவ்வறிவிப்பு செல்வராஜா சுரேஸ்குமாரின் கொலைக் குற்றவாளிகளுக்கு தண்டனை அறிவிக்கப்பட்ட பின்னர் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் சுப்பிரின்ரன் மார்க் ஜக்சனால் வெளியிடப்பட்டது.

ஸ்கொட்லன்ட் யாட் அதிகாரிகள் தமிழ் சமூகப் பிரதிநிதிகளைச் சந்தித்த போது வழங்கிய ஆலோசனையை அடுத்து இந்த தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தப்பட்டு உள்ளதாக Chief Inspector Territorial Policing - Philip Perry தெரிவித்து உள்ளார். இவ்விணைப்பு 3 மாதகாலத்திற்கு பரீட்சார்த்தமாக செயற்பட உள்ளதாகவும், அது வெற்றி அளிக்கும் பட்சத்தில் தொடர்ந்து இவ்விணைப்பு செயற்படும் என்றும் அவர் தெரிவித்தார். ஆனால் கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இணைப்பு வெற்றி அளிக்காததால் கைவிடப்பட்டமை கவனிக்கத்தக்கது.

இத்தொலைபேசி இணைப்பில் தகவல் கொடுப்பவர்கள் தங்களைப் பற்றிய விபரங்களைக் கொடுக்காமல் தங்களிடம் உள்ள தகவல்களை தொலைபேசியின் பதிலளிக்கும் சாதனத்தில் பதிவு செய்துவிடலாம்.(Answering Machine) இல்லையேல் தகவல் வழங்க விரும்புபவர் பொலிஸ் அலுவலருடன் தொடர்பு கொள்ள விரும்பினால் தனது தொடர்பு இலக்கத்தை பதிவு செய்துவிடலாம். இத்தொலைபேசி அழைப்பு பதிவுகள் திங்கள் முதல் வெள்ளி வரை கேட்கப்படும்.

தகவல் கொடுப்பவர்கள் தங்களுக்கு தெரிந்த முழுத்தகவல்களையும் வழங்கும்படி கேட்கப்பட்டு உள்ளனர். குற்றச் செயல்களில் ஈடுபாடுள்ளவர்களாக அடையாளம் காணப்பட்டவர்களின் பெயர், பட்டப் பெயர், வயது, வாகன இலக்கம், முகவரி ஆகிய தகவல்களை பொலிஸார் எதிர்பார்க்கின்றனர்.

இத்தொலைபேசி இணைப்புத் தொடர்பான துண்டுப் பிரசுரங்கள் சுவரொட்டிகள் ஆகியன பொலிஸ் பிரிவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பொலிஸார் விரைவில் அதனை மக்கள் மத்தியில் கொண்டு வர உள்ளனர்.

## தமிழர்களின் சுகாதாரத்திற்கு £90,000

தமிழ் அகதிகள் நடவடிக்கைக் குழுவிற்கு £90,000 நிதி ஒதுக்கப்பட்டு உள்ளது. கரோ, பிரன்ற் பகுதிகளில் சுகாதார நடவடிக்கைகளில் ஈடுபட்ட இவ்வமைப்பு தனது சேவைகளை ஈலிங், பானற் பகுதிகளுக்கும் விஸ்தரிப்பதற்கு இந்நிதி பயன்படுத்தப்பட உள்ளது. தமிழ் சமூகத்திடையே பொதுவாக காணப்படும் நீரிழிவு, இதயநோய் போன்ற நோய்களுடன் எய்ட்ஸ், ஆஸ்த்மா, மார்புப் புற்று நோய்கள் ஆகியவற்றில் இருந்து தடுக்கும் நடவடிக்கைகளுக்கு இந்நிதி பயன்படுத்தப்பட இருக்கிறது. மேலும் புகைத்தல், மதுவிற்கு அடிமையாதல் போன்ற ஆபத்துக்கள் பற்றிய விழிப்புணர்வையும் இவ்வமைப்பு மேற்கொண்டு வருகிறது. இவ்வமைப்பு தமிழில் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்வதுடன் நோய்கள் பற்றிய அறிவை, விழிப்புணர்வை ஏற்படுத்தும் துண்டுப் பிரசுரங்களையும் வெளியிட்டு வருகிறது.

## தமிழ் சிறுவர்கள் விருதுகளை வென்றனர்

முத்திரை சேகரிப்பு மற்றும் காட்சிப்படுத்தலில் தமிழ் சிறார்கள் விருதுகளை வென்றனர். இலண்டன் தமிழ் மையத்தைச் சேர்ந்த சிறார்கள் இப்போட்டியில் 12 வெள்ளிப் பதக்கங்களையும் 11 வெண்கலப் பதக்கங்களையும் இருவர் வெற்றிக் கிண்ணங்களையும் பெற்றனர். உசானி சிறிநாதன் Royal Horticultural Society ன் வெற்றிக் கோப்பையைப் பெற்றார். முத்திரை சேகரிப்பு மற்றும் காட்சிப்படுத்தலுக்காக வெற்றிக் கோப்பையை ஒரு தமிழ்க் குழந்தை பெற்றிருப்பது இதுவே முதற் தடவை எனத் தெரியவருகிறது. செப்ரம்பர் 17 முதல் 21 வரை இச் சேகரிப்புகள் காட்சிக்கு வைக்கப்பட்டு இருந்தன. விருது வழங்கும் வைபவம் செப்ரம்பர் 20ம் திகதி இடம்பெற்றது. 16 தமிழ் சிறார்கள் விருதுகளை வென்றனர். இலண்டன் தமிழ் மையத்தில் 360 சிறார்கள் கற்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

EDITOR: Dr T RAVIKUMAR Chief Reporter: T.JEYABALAN Advertising Manager: T. PUSHPALINGHAM FREELY Circulated throughout UK, FRANCE & GERMANY

# தீபம் அடுத்த கட்டத்தை நோக்கி நகரும் - இயக்குநர் எஸ் செல்வகுமரன்

தீபம் தொலைக்காட்சி தொடர்ந்தும் முன்நோக்கி அடுத்த கட்டத்திற்கு நகரும் என அதன் இயக்குநர் செல்வகுமரன் உதயனுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார். இச்சந்திப்பு ஓகஸ்ட் 18ல் தீபம் கலையகத்தில் இடம்பெற்றது.

தீபத்தில் இருந்து சிலர் வெளியேறியது அல்லது வெளியேற்றப்பட்டது தொடர்பாக அவர் உதயனுக்கு அளித்த பேட்டியிலேயே தீபத்தின் எதிர்காலத் திட்டம் பற்றி விபரித்தார். தீபத்தில் சிலர் வெளியேறியது அல்லது வெளியேற்றப்பட்டது முற்றிலும் உள் நிர்வாகம் சம்பந்தப்பட்ட விடயம் எனக் குறிப்பிட்ட செல்வகுமரன் ஊழியர்களுக்கான சகல உரிமைகளும் வழங்கப்பட்டு உள்ளதாகக் குறிப்பிட்டார். உண்மையான உழைப்பாளிகளுக்கு தீபத்தில் நல்ல எதிர்காலம் உண்டு என்று உறுதியுடன் அவர் தெரிவித்தார்.

தற்போது தமிழகத் தொலைக்காட்சிகளும் களத்தில் குதித்துள்ள நிலையில் நீங்கள் எப்படிப் பார்வையாளர்களை வெல்லப் போகிறீர்கள் என்று கேட்டதற்கு, தாங்கள் தமிழகத் தொலைக்காட்சிகள் எல்லாவற்றினதும் சிறந்த நிகழ்ச்சிகளை தெரிந்தெடுத்து வழங்குவதாகத் தெரிவித்தார். மற்றுமொரு கேள்விக்கு பதிலளிக்கையில் தமிழகத்தில் சொந்தக் கலையகத்தை கொண்டு உள்ளதாகவும் மிக விரைவில் இலங்கையிலும் சொந்தக் கலையகம் ஒன்று உருவாக்கப்பட உள்ளதாகவும் குறிப்பிட்டார். மேலும் இலண்டனில் பொது நிகழ்ச்சிகளைப் பதிவு செய்யும் கலையகம் ஒன்றும் உருவாக்கப்படும் என்றும் தெரிவித்தார். இவற்றின் மூலம் தீபம் ஏனைய தொலைக்காட்சிகளில் தங்கி நிற்காமல் சொந்தத் தயாரிப்புகளில் ஈடுபடும் என்று நம்பிக்கை வெளியிட்டார்.

குறும்படங்கள், சிறுகதை நேரம் போன்ற புதிய நிகழ்ச்சிகள் பதிவு செய்யப்பட்டு வருவதாகக் குறிப்பிட்ட செல்வகுமரன் தரமான புலம்பெயர்ந்த படைப்புகள் எப்போதும் வரவேற்கப்படும் என்று தெரிவித்தார். தரமான நிகழ்ச்சிகளுக்கு ஓளிபரப்பும் நேரத்தை இலவசமாக வழங்குவதாகக் குறிப்பிட்ட அவர் தயாரிப்பாளர்கள் விளம்பரங்களைப் பெற்று இலாபத்தை ஈட்டமுடியும் என்றும் தெரிவித்தார். நிகழச்சிகளைப் பொறுத்த வரை ஆரம்பத்தில் வாரத்தில் 7 படங்கள் போடப்பட்டு வந்தது. இப்போது 4 படங்கள் மட்டுமே காட்டப்படுகிறது. மேலும் புலம் பெயர்ந்த படைப்பாளிகளின் திரைப்பட விழாவையும் தீபம் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. நேரடி ஒளிபரப்பையும் தீபமே ஆரம்பித்து வைத்ததை செல்வகுமரன் பெருமையுடன் நினைவுபடுத்தினார்.

புலம்பெயர்ந்த படைப்புகளை ஊக்கப்படுத்த நாங்கள் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்ட செல்வகுமரன் புலம்பெயர்ந்த மக்கள் எங்களுக்கு ஆதரவு தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். உதயன் பத்திரிகையும் அதன் வாசகர்களும் தீபத்திற்கு ஆதரவளித்து ஊக்கப்படுத்த வேண்டும் என பேட்டியின் இறுதியில் செல்வகுமரன் கேட்டுக் கொண்டார்.

# அவுஸ்திரேலியாவில் சிகரம் தொலைக்காட்சி

அவுஸ்திரேலியா, நியூசிலாந்து பகுதிகளில் புதிய தமிழ்த் தொலைக்காட்சிக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. Tamil Vision Networks (TVN) என்ற நிறுவனம் சிகரம் என்ற பெயரில் தமிழ்த் தொலைக்காட்சி ஒன்றை அறிமுகப்படுத்த உள்ளது. வழமையான தமிழ் தொலைக் காட்சிகளுக்கு உள்ள சினிமா, இசை, சின்னத்திரைத் தொடர்கள், செய்திகளுடன் சில சிறப்பு அம்சங்களும் சேர்க்கப்பட்டு தரமான தொலைக்காட்சியாக வெளிவர உள்ளதாக Tamil Vision Networksன் ஸ்தாபகர் திவாகரன் முத்துலிங்கம் (தினோ) உதயனுக்குத் தெரிவித்தார். சிறுவர் நிகழ்ச்சிகள், நிகழ்கால விடயங்கள், விவரணங்கள் என்பன சிறப்பம்சமாக அமையும் என திவாகரன் தெரிவித்தார்.

90க்களில் கிழக்கு இலண்டனிற்கு புலம்பெயர்ந்த திவாகரன் தற்போது அவுஸ்திரேலியாவில் மணம் முடித்து உள்ளார். அங்கு தொலைக்காட்சித்துறையில் இறங்கி உள்ளார். ஏற்கனவே அங்கு சில தமிழ்த் தொலைக்காட்சிகள் ஆரம்பிக்கப்பட்டு கைவிடப்பட்டு உள்ளது. அதனால் மக்கள் அதற்கு செலுத்திய கட்டணமும் இல்லாமல் போய் உள்ளது. இந்நிலையில் மக்களிடம் நம்பிக்கையைப் பெறுவது சற்று கடினமாக உள்ளது எனக் குறிப்பிட்ட திவாகரன் மக்கள் மீது நம்பிக்கை வைத்து இத்துறையில் இறங்கி உள்ளதாகக் குறிப்பட்டார்.

நவீன தொழில்நுட்பத்துடன் இலாபகரமான வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொண்டு இத் தொலைக்காட்சி உருவாக்கப்பட்டு உள்ளதால் தரமான நிகழ்ச்சிகளை வழங்கி வர்த்தகரீதியிலும் வெற்றிகொள்ள முடியும் என திவாகரன் சிகரம் பற்றித் தெரிவித்தார். மேலும் இத்தொலைக்காட்சி உலகின் வெவ்வேறு பாகங்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

கடந்த சில மாதங்களில் ஐரோப்பாவில் தமிழ் தொலைக்காட்சிகளின் எண்ணிக்கை இரட்டிப்பாகி உள்ளது. தமிழகத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் தங்கி இருந்த புலம்பெயர்ந்த தமிழர்களின் தொலைக்காட்சிகள் தமிழகத் தொலைக்காட்சிகள் நேரடியாக வருவதால் கடும் போட்டியை சந்திக்கின்றன. தமிழகத் தொலைக்காட்சிகள் அவுஸ்திரேலியாவிலும் தமது பரப்பை விரிவுபடுத்த உள்ளன. இந்நிலையில் சிகரம் எப்படி வெற்றிகொள்ளப் போகின்றது என்பது தமிழ் பார்வையாளர்களிலேயே தங்கி உள்ளது.

# ஐரோப்பியத் தமிழ் ஒலிபரப்பு

ஐரோப்பியத் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் Europe Tamil Broadcasting Co-operation - ETBC தனது ஓராண்டு நிறைவை ஒக்ரோபர் 5ம் திகதி கொண்டாடியது. இந்நிகழ்வுக்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் மத்திய கிழக்கில் இருந்தும் ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். 24 மணிநேர ஒலி பரப்பை மேற்கொள்ளும் இவ்வானொலி கடந்த ஓராண்டுக்குள் தனக்கென ஒரு கேட்போர் வட்டத்தை உருவாக்கி வெற்றிகரமாக இயங்கி வருகிறது.

ஓராண்டு நிறைவு நிகழ்வில் தனது கடந்தகால அனுபவங்களை பணிப்பாளர் ஜெயக்குமார் வானொலி ரசிகர்களுடன் பகிர்ந்து கொண்டார். எதிர்காலத்துக்கான புதிய நிகழ்ச்சிகள் பற்றிய அறிவிப்பை வெளியிட்டதுடன் தொலைக்காட்சிகளால் ஈர்க்கப்பட்ட ரசிகர்களை மீண்டும் வானொலிக்கு கொண்டுவரவும் அவர் கங்கணம் கட்டி உள்ளார். ஜெயக்குமாருடன் அவரது வாழ்க்கைத் துணைவி மாலதி ஜெயக்குமாரும் இவ்வானொலியில் கடமையாற்றுகின்றார்.

இவர்களுடன் பிரபல எழுத்தாளர் அகஸ்தியரின் மகள் நவஜோதி, மருமகன் யோகரட்ணம், கண்ணன், திருலோகச்சுந்தர், சிவாந்தி, சிவாஜினி, சிறி, ரஞ்சன், உதயகுமார், வேந்தன் மற்றும் இன்னும் சில புதிய அறிவிப்பாளர்களும் பணியாற்றுகின்றனர். உள்ளம் தழுவும் உதயமாருதம், வீட்டுக்கு வீடு வாசல்படி போன்ற சமூக விடயங்கள் பற்றிய கருத்தாடல் நிகழ்ச்சிகள்; சாளரம், இசைப்பாட்டு போன்ற இலக்கிய நிகழ்ச்சிகள்; சந்திப்பு நேர்காணல்களைக் கொண்ட திறந்த கதவுகள், போட்டி நிகழ்ச்சிகளான நீயா? நானா?, நூற்றுக்கு நூறு, கணக்கு விடலாமா போன்ற நிகழ்ச்சிகள் இவற்றுடன் செய்திகள், திரைப்படப் பாடல்கள் போன்ற பொது நிகழ்ச்சிகளையும் இன்னும் பலவிதமான நிகழ்ச்சிகளையும் கொண்டு இவ்வானொலி தனது பயணத்தைத் தொடர்கிறது.

இவ்வாண்டு முதல் உலகின் ஏனைய பாகங்களில் உள்ள தமிழ் வானொலிகளுடன் உறவை அமைத்து ஓர் உறவுப் பாலத்தை கட்டியெழுப்ப ஐரோப்பியத் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முற்பட்டு உள்ளமை அதன் குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும். இலண்டன் பெர்ஸ்ற் ஓடியோ கலையகம், கனடா கீதவாணி, அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்பு ஆகியவையும் ஐரோப்பிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினூடாக ஒலிபரப்பை மேற்கொள்கின்றன.

# தமிழ் பொலிஸார் அதிகரிக்கப்பட வேண்டும் - உதயன்

மெற்றோ பொலிட்டன் பொலிஸில் தமிழ் பொலிஸாரின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் என உதயன் நிருபர் ஸ்கொட்லன்ட்யாட் செப்ரம்பர் 19ல் ஏற்பாடு செய்த சந்திப்பில் வேண்டுகோள் விடுத்தார்.

தற்போது ஸ்கொட்லன்ட்யாட்டில் 5 தமிழ் பொலிஸ் அலுவலர்களே உள்ளதாகவும் அவர்களில் மூவர் வட இலண்டனையும் இருவர் கிழக்கு இலண்டனையும் சேர்ந்தவர்கள் எனத் தெரியவருகிறது. இவர்களில் இருவர் தற்போதைய ஒப்பிரேசன் என்வர் நடவடிக்கையில் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

தமிழ் பொலிஸாரின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பதை ஏற்றுக் கொண்ட Deputy Asst Commissioner Stephen House அதனை அதிகரிக்க தமிழர்கள் மெற்றோ பொலிட்டன் பொலிஸில் இணைய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

SIGN★A★RAMA
"WHERE THE WORLD GOES FOR SIGNS"
For all your Signage needs
Shop Fascias, Window Graphics, Pavement Boards and much more
0800 634 0096
220 Church Lane, Kingsbury
London NW9 8SN
www.signking.net
ISO 9001 REGISTERED FIRM
Reg. No. 8876

FURNITURE KING
FREE LOCAL DELIVERY
FREE ASSEMBLEY
3 Door Pine Wardrobe From £199.99
2 Door Pine Wardrobe From £129.99
5+2 Drawer Pine Chest From £89.99
3 Drawer Pine Chest From £29.99
Beds From £69.99
Metal frame complete with sprung mattress, etc.
Dining Sets From £99.99
Nest of Tables, Coffee Tables, Bookcases, Computer Desks, etc From £29.99
BELMONT CIRCLE, HARROW
020 8931 8686
www.furniture-king.co.uk
30 Watling Avenue, Burntoak,
Tel: 020 8951 5513
info@furniture-king.co.uk



FUNTASIA
The Party Shop
BALLOON PRINTING
BALLOON DECORATING
HELIUM HIRE
PARTY WARE & NOVELTIES
BRIDAL FAVOURS
SOFT TOYS
FANCY DRESS, WIGS, MASKS
JOKES & MAKE-UP
ADULT JOKES & NOVELTIES
PERSONALISED NAPKINS
AND BOOK MATCHES.
RUBBER STAMPS SERVICES
சகலவிதமான
வைபவங்களுக்கும்
தேவையான அலங்கார
சோடனைகளுக்கு நாடுங்கள்
Funtasia
229 KENTON ROAD, KENTON, HARROW, MIDDLESEX HA3 0HD
Tel/Fax: 020-8907 1333 www.FuntasiaWorld.com

TRICO SHIPPING WORLDWIDE
Small cartons and large container
Full House packing and shipping to any destination of your choice.
Special Rates:- COUCHIN, TREVENDRAM, BOMBAY - CHENNAI
* Two regular shipments to Colombo per month
* Goods arrive within 17days
20 YEARS IN SERVICE
Call us for a friendly personal service
Tel: 020 8888 8787
Fax: 020 8888 5445
E-mail: trico@btclick.com
UNIT 4 - BUILDING C BUSINESS CENTRE, CLARENDON ROAD,
WOODGREEN, LONDON N22 6XJ

Panesar Electrical Co.
SPECIAL OFFER
MK 12 WAY SPLIT FUSE BOX
100 AMP MAIN SWITCH, 80 AMP BCD + 8MC B8
ONLY £85.00



TRACK LIGHT
COMPLETE WITH + SPOT SONLAMPS
ONLY £35.00
CHROME 2GANG SWITCH SOCKET
ONLY £6.50



GE SAS SPLITBOX
100 AMP MAIN SWITCH, BCD + 10 MCBS
ONLY £85.00



BRASS £5.95



364 High Street North,
Manor Park,
London E12 6PH
Tel: 020 8472 1873

SiGN FiT
The Company of Dynamic Ideas.
Specialist in Illuminated, Non-Illuminated, Menu System & Menu Photos.
Challenge: We will beat any Price.
Best Deal Best Design Best Service
Tel:020 8552 1194
Fax:020 8548 1047 Mob:07956 274762
482 Barking Road, East Ham London E6 2LT
Web: www.signfituk.com E-mail: sales@signfituk.com

we welcome NEWS REPORTING. UDHAYAN specialises in INVESTIGATION JOURNALISM. Please report incidences happening in YOUR AREA, confidentiality assured.

## அடங்காப்பற்று வன்னியர் கௌரவிக்கப்பட்டார்

நாடகக் கலைஞர் அருணா செல்லத்துரை இலண்டனில் கௌரவிக்கப்படுகிறார். கடந்த 25 ஆண்டுகளாக அவர் தமிழ் இலக்கியத்துறைக்கு செய்த பங்களிப்பிற்காக அவரை கௌரவிக்க நாடக மற்றும் இலக்கிய ஆர்வலர்கள் கௌரவித்தனர். செப்ரம்பர் 13ல் மேற்கு ஈலிங் சப்பல் வீதியில் உள்ள ஆலய மண்டபத்தில் இந்த கௌரவிப்பு வைபவம் இடம்பெற்றது. இவ்விழாவிற்கான ஏற்பாட்டை ம சத்தியமூர்த்தி மேற்கொண்டிருந்தார்.

இந்நிகழ்ச்சியில் அருணா செல்லத்துரையின் நூல்கள் வெளியிடப்பட்டதுடன் அவரது கிராமிய நாடகஒலிப் பேழையும் வெளியிடப்பட்டது. கலைஞர்கள் வாழும் போதே கௌரவிக்கப்பட வேண்டும் என்ற உணர்வு புலம்பெயர்ந்த சமூகத்திடையே தற்போது ஏற்பட்டு வருவது மிகவும் வரவேற்கத் தக்க விடயம் எனக் குறிப்பிட்டார் உதயன் வாசகரும் இலக்கிய ஆர்வலருமான பிறேம்குமார். கலையரசு சொர்ணலிங்கம், முகத்தார் யேசுரட்ணம் போன்ற கலைஞர்கள் கௌரவிக்கப்பட்ட வரிசையில் கலைஞர் அருணா செல்லத்துரையும் தற்போது கௌரவிக்கப்படுகிறார்.

கலைஞர்கள் தங்கள் படைப்புகள் மூலம் வரலாற்றைப் பதிவு செய்கிறார்கள். அத்தகைய கலைஞர்களை கௌரவிப்பதே எமக்கு கௌரவம் எனக் குறிப்பிட்ட ஏற்பாட்டாளர் சத்தியமூர்த்தி கலந்து கொண்டு விழாவை சிறப்பித்த இலக்கிய ஆர்வலர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

## பத்திரிகையாளரின் மறைவு

மூத்த பத்திரிகையாளரும், முப்பது ஆண்டுகளுக்கும் அதிகமான காலம் தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் விளங்கிய கலாசூரி இரத்தினதுரை சிவகுருநாதன் (71) ஒகஸ்ட் 16, அதிகாலை கொழும்பில் தனியார் மருத்துவமனையில் காலமானார்.

1931 ஒக்ரோபர் 7ல் யாழ் கந்தர்மடத்தில் பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ்.சென். ஜோன்ஸ் கல்லூரியிலும், யாழ். இந்துக் கல்லூரியிலும் கற்றதுடன் உயர் கல்வியை கொழும்பு சாகிரா கல்லூரியில் கற்றார். பேராதனை பல்கலைக்கழகத்தில் பட்டமேற்படிப்பை மேற்கொண்டு கலைப்பட்டதாரியானார்.

1955 இல், லேக்கவுஸ் நிறுவனத்தின் தமிழ் நாளேடான தினகரன் பத்திரிகையில் உதவி ஆசிரியராக இணைந்து இவர் 1961 இல் தினகரன் பிரதம ஆசிரியரானார். 30 ஆண்டுகளுக்கு மேலாக தினகரனில் பணியாற்றினார். 1994 இல் ஆட்சி மாற்றத்துடன் தனது 49 வருட பத்திரிகைத் துறை வாழ்விலிருந்து ஓய்வு பெற்றார்.

## கிரேக்க கடலில் படகு மூழ்கியது
## இலங்கையர் உட்பட 32 பேர் மீட்பு

40 பேருடன் சட்டவிரோதமாக கிரேக்கத்தினுள் நுழைவதற்காக சென்று கொண்டிருந்த படகு ஒகஸ்ட் 13 இரவு கிரேக்க கடலில் மூழ்கியது. இதில் பயணம் செய்த ஐவர் உயிரிழந்துள்ளனர். இலங்கையர் உட்பட 32 பேர் கரையோரப் பாதுகாப்புப் படையினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

10 பேர் மட்டுமே பயணம் செய்யக்கூடிய இப்படகில் 40 பேர் பயணம் செய்துள்ளனர். இதன் காரணமாகவே இப்படகு நீரில் மூழ்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. உயிரிழந்தவர்களில் ஒருவர் ஈராக்கியர். மூவர் ஈராக்கியக் குழந்தைகள். மற்றவர் எதியோப்பிய நாட்டுப் பெண்மணி.

காப்பாற்றப்பட்டவர்களில் இலங்கை, சோமாலியா, சூடான் மற்றும் ஈரான் நாட்டவர்கள் அடங்கி இருந்தனர். காணாமற்போன மூவரைத் தேடி 7 கடற்படைப் படகுகளும் ஒரு கெலிகொப்டரும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டன. காப்பாற்றப்பட்டோர் நலமுடன் இருப்பதாக மருத்துவமனைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## யுத்தத்தினால் தமிழ் சிறார்கள் கல்வி இழப்பு

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்கள் பெரும் எண்ணிக்கையில் உள்ளனர் என்றும் அவர்களை இனங்கண்டு பாடசாலைக் கல்வியை வழங்க வேண்டிய பாரிய பொறுப்பு கல்விச் சமூகத்திற்கு உண்டு என்றும் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கம் தெரிவித்தார். பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்கள் பற்றிய விபரங்களை வீடு வீடாகச் சென்று சேர்க்கும் திட்டத்திற்கு யுனிசெவ் அமைப்பினால் மோட்டார் சைக்கிள்கள் நன்கொடையாக வழங்கிய நிகழ்வில் பங்குபற்றிப் பேசும் போதே அவர் இக்கருத்தைத் தெரிவித்தார்.

ஒகஸ்ட் 14ல் யுனிசெவ் திருமலை அலுவலகத்தில் இந் நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் யுனிசெவ் வழங்கிய ஆறு மோட்டார் சைக்கிள்களும் கந்தளாய், மூதூர் மற்றும் திருமலை வலயக் கல்வித் திணைக்களங்களுக்கு பங்கிட்டு வழங்கப்பட்டன. சமாதான முயற்சி ஆரம்பமான பின் வெளிநாடுகளிலிருந்து நிதியுதவி கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிகழ்வில் திருமலை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் தேவிகாராணி முருகுப்பிள்ளை, உதவிக் கல்விப் பணிப்பாளர் குலேந்திரன், யுனிசெவ் திருமலை கல்விப் பொறுப்பாளர் உதயகுமார் இவர்களுடன் யுனிசெவ் திருமலைப் பிரதிநிதி கபிரியெல்லா எல்றோய்யும் கலந்துகொண்டனர்.

## புரட்சிவாதி சண்முகதாசன் ஒரு தீர்க்கதரிசி



பொதுவுடமை இயக்கத்தின் புரட்சிகர அரசியல் முன்னோடி என் சண்முகதாசனின் 10 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வை இலண்டனில் நிகழ்த்த திட்டமிடப்படுகிறது. இலண்டனில் இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளை பொதுவுடமைவாதி எஸ் பாலச்சந்திரன் மேற்கொண்டு உள்ளார். தோழர் சண்முகதாசன் அன்று கூறிவிட்டுச் சென்ற அரசியல் தீர்க்கதரிசனங்கள் இன்று நிஜமாகி உள்ளது என்று குறிப்பிட்ட பாலச்சந்திரன் அவரது உயிர் பிரிந்த இந்த பிரித்தானிய மண்ணில் அவரது நினைவுகளை மீட்பது பொருத்தமானது என்று குறிப்பிட்டார். இன்றைய அரசியல் சூழலில் ஒரு அரசியல் தீர்க்கதரிசியையும் அந்த தீர்க்கமான அரசியல் சிந்தனையையும் சீர்தூக்கிப் பார்க்க இந்நினைவு நிகழ்வு உதவும் என பாலச்சந்திரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

இவ்வாறான நிகழ்வொன்று கொழும்பில் பேராசிரியர் சி.சிவசேகரம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வை மார்க்சிய கற்கைகளுக்கான சண்முகதாசன் நிலையம் ஏற்பாடு செய்திருந்தது. இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியல்துறைத் தலைவர் வி.பி.சிவநாதன் இலங்கையின் அரசியல் பொருளாதாரமும் தேசிய இனப்பிரச்சினையும் எனும் தலைப்பில் நினைவுரை செய்தார்.

10 ஆண்டுகளுக்கு முன்னர் சண்முகதாசன் தனது மகளுடன் மஞ்செஸ்ரரில் தங்கி இருந்த போதே காலமானார். சண்முகதாசனின் மருமகனும் அவரது பொதுவுடமைத் தத்துவத்தில் மிகவும் உறுதியான ஈடுபாடு கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மூவர் அரங்கேற்றம்



கிருத்திகா அருணகிரி, ஜனனி தனபாலசிங்கம், கம்சினி ரகுநாதன் ஆகிய மூன்று குமாரிகளின் அரங்கேற்றம் லோகன் மண்டபத்தில் ஓகஸ்ற் 30ல் இடம்பெற்றது. கலேச்சேத்திராவின் மாணவிகளான குமாரி அம்பிகை சீவரட்ணம், ஸ்ரீமதி விமலதாச ஆகியோரின் மாணாக்கரே ஒரே மேடையில் அரங்கேறினர். சிறப்பு விருந்தினராக பேராசிரியர் என் எஸ் ஜெயலக்ஸ்மி கலந்து கொண்டார். கலைமாமணி லீலா சாம்சன் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டார்.

நட்டுவான்கம் - அம்பிகை சீவரட்ணம், ஸ்ரீமதி விமலதாச; பாட்டு - ஸ்ரீமதி திலகசக்தி ஆராமுதன்; மிருதங்கம் - ஸ்ரீ காரைக்குடி ஆர் கிருஸ்ணமூர்த்தி; வயலின் - ஸ்ரீ கெ ரி சிவகணேசன்; புல்லாங்குழல் - ஸ்ரீ தியாகராஜா ராகவர்மன்.

## அமெரிக்க சட்டத்துக்கு எதிராக தமிழர் வழக்கு

சிலிக்கான் வேலி பகுதியில் வசிக்கும் டாக்டர் ஜெயலிங்கம் அமெரிக்காவில் உள்ள தேச பக்த சட்டத்தை எதிர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார். நியூயோர்க் நகரின் செப்ரெம்பர் 11 அனர்த்தத்தை அடுத்து தேச பக்த சட்டம் அமெரிக்காவில் இயற்றப்பட்டது. அதன்படி, பயங்கரவாத அமைப்புகளுக்கு உதவுவது கிரிமினல் குற்றமாகும். ஒருவர் விரும்பும் அரசியல் கொள்கைகளை, கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான அடிப்படை உரிமையை அச்சட்டப்பிரிவு மீறுகிறது. இது மனித உரிமைகளை மீறுவதாகும் எனவே, இத்தேச பக்த சட்டத்தை ரத்துச் செய்ய வேண்டும் என்று கூறி லொஸ் ஏஞ்சல்ஸ் நீதிமன்றத்தில் டொக்டர் ஜெயலிங்கம் வழக்கு தொடுத்துள்ளார்.


இலங்கையைச் சேர்ந்த இவர் இனப்பிரச்சினை காரணமாக குடும்பத்துடன் புலம்பெயர்ந்து அமெரிக்காவில் குடியேறியவர் ஆவார். தமிழர்களின் நலனில் அக்கறை கொண்ட இவர் அமெரிக்காவில் உள்ள மக்களுக்கு மருத்துவ சேவையை அளித்து வருபவர்.

ஆனால், அப்பகுதியில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவமனைகளுக்கு உதவி புரிந்தால் மேற்படி சட்டத்தின் கீழ் தன் மீது நடவடிக்கை எடுக்கமுடியும் எனக் கருதுகிறார் டாக்டர் ஜெயலிங்கம். எனவே, அச்சட்டத்திற்கு எதிராக வழக்கு தொடுத்துள்ளார்.

Taste of Asia
Halal Restaurant and Takeaway
OPEN NEW
* Srilankan Special
* Sunday Buffet only 4.99
* Party Orders
020 8424 2151
3, Masons Avenue, Harrow Wealdstone

BABA Cash & Carry
West London's Finest
Specialist in
Beers, Spirits, Wines & Minerals
Tel: 020 8589 0000
Unit 1C, Chailey Industrial Estate
Pump Lane, Hayes, Middx. UB3 3NB

MALIK DOUBLE GLAZING LTD
Manufacturers, Suppliers & Installers of Double Glazing, UPVC and Aluminium Windows, Doors, Patio Doors & Porches
Trade & Retail Welcome
020 8459 8811
www.malikdoubleglazing.co.uk Fax: 020 8459 8844
202 Church Road, Willesden, London NW10 9NP



KUDOS CONTRACT FURNITURE
Quality furniture to suit your budget
Single Bed From £49.95
Double Bed From £79.95
BARGAIN PRICES
Call us on
020 8893 6192
07887720960
357, Uxbridge Road, Southall

QUALITY RIGID KITCHENS
Suppy Only or Suppy & Fit
* Replacement Doors available any size
* Made to measure Bedrooms
* All makes of Appliances
* Trade account welcome
HEATHROW KITCHENS
140 UXBRIDGE ROAD, HAYES
FAX: 020 8581 1005
020 8813 6952



# உடல், உள, பாலியல் நலம்



பேராசிரியர் கோபன் மகாதேவா, நூலாசிரியர் ராஜேஸ்பாலா, நூல் விமர்சகர் மீனா நித்தியானந்தன்

தமிழர்களிடையே உடல், உள, பாலியல் விடயங்கள் தொடர்பான ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டு உள்ளது. இதனை மருத்துவத்துறையைச் சார்ந்தவரும் எழுத்தாளருமான ராஜேஸ் பாலா மேற்கொண்டு உள்ளார். பிரித்தானிய தேசிய சுகாதார சேவையில் கல்வியியல் ஆலோசகராகக் கடமையாற்றும் ராஜேஸ் பாலா உடல், உள, பாலியல் மருத்துவம் பற்றிய அத்தியாவசியமானதும் முக்கியமானதுமான விளக்கத்தைக் கொண்ட நூல் ஒன்றை எழுதி வெளியிட்டு உள்ளார்.

'உங்கள் உடல், உள, பாலியல் நலம் பற்றி' என்ற தலைப்பில் வெளிவந்துள்ள இந்நூல் தெற்காசியர்களை குறிப்பாக தமிழர்களை பாதிக்கும் இதயநோய், நீரிழிவு, மன உளைச்சல் போன்ற முக்கிய நோய்கள் பற்றிய அறிவை வழங்குவதுடன் அவற்றைத் தவிர்ப்பதற்கான வழிவகைகளையும் வழங்குகிறது. பாலியலின் அவசியம் பற்றியும் தாம்பத்திய உறவு பற்றியும் தமிழில் இந்நூலே முதற் தடவையாக வெளிவந்திருப்பதாக ராஜேஸ் பாலா உதயனுக்குத் தெரிவித்தார். 150 பக்கங்களுடன் வெளிவந்துள்ள இந்நூலின் வெளியீட்டு விழா செப்ரம்பர் 14ல் ரூற்றிங்கில் இடம்பெற்றது.

பேராசிரியர் கோபன்மகாதேவா தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் டொக்டர் எஸ் தியாகராஜா, மீனா நித்தியானந்தன், எஸ் சதானந்தன், எம் சூரியசேகரம் ஆகியோர் நூல் பற்றிய ஆய்வைச் செய்தனர்.

# தமிழ் வானொலி கைவிடப்பட்டது

சில மாதங்களிற்கு முன் தனது நான்காவது ஆண்டை நிறைவு செய்த தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அண்மையில் கைவிடப்பட்டது. அதன் பணிப்பாளர் ராம்ராஜ் அவர்களின் அரசியல் நிலைப்பாட்டின் காரணமாக அவருடன் இணைந்து பணியாற்றிய அறிவிப்பாளர்கள் சிலர் வெளியேறியதை அடுத்தே இவ்வானொலி கைவிடப்பட்டது.

முழுநேர அறிவிப்பாளர் ரமணன் தஞ்சம் நிராகரிக்கப்பட்டு இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டதை அடுத்து அவ்வானொலி நெருக்கடிக்கு உள்ளானது. அச்சமயம் இலங்கை சென்றிருந்த அவ்வானொலியின் பணிப்பாளர் இந்தியாவில் இருந்து வெளியாகும் இந்து பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் வானொலியை ஈ.என்.டி.எல்.எப் உடன் அடையாளப்படுத்தியதை அடுத்து வானொலி அறிவிப்பாளர்களிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டு வானொலியை தொடர்ந்தும் நடத்த முடியாத நிலை ஏற்பட்டது.

இதற்கிடையே இலண்டன் பெர்ஸ்ற் ஓடியோ கலையகத்துடன் உடன்பாடு ஒன்றுக்கு மேற்கொண்ட முயற்சிகளும் கைகூடவில்லை. மேலும் இவ்வானொலி நிலையத்தின் முக்கிய ஒலிபரப்பு சாதனம் ஒன்றும் களவாடப்பட்டது. இந்நிலையில் இவ்வானொலியை தொடர்ந்து நடத்தவோ அல்லது விற்பதற்கோ முடியாத நிலையில் இவ்வானொலி கைவிடப்பட்டு உள்ளது.

ஐரோப்பாவில் விடுதலைப் புலிகளின் அரசியல் நிலைப்பாட்டிற்கு மாறுபட்ட அபிப்பிராயம் கொண்டவர்களுக்கு ஒரு தளமாக இந்த வானொலி செயற்பட்டு வந்தது. தற்போது அந்த வானொலி கேட்போரின் தளம் வெற்றிடமாக உள்ளது.

# எங்களை புரிந்து கொள்ளாமல் படம் தயாரிக்கிறார்கள் - கவிஞர் தயானந்தா

எங்களைப் புரிந்து கொள்ளாமல் தமிழகத்தில் படம் தயாரிக்கிறார்கள் என இலங்கை வானொலியின் முன்னணி அறிவிப்பாளர் கவிஞர் இளையதம்பி தயானந்தா செப்ரம்பர் 30ல் வோல்தம்ஸ்ரோவில் இடம்பெற்ற கலைஞர்கள் பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவித்தார். ஈழவர் திரைக்கலை மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இச்சந்திப்பில் இளையதம்பி தயானந்தாவும் சலனச் சித்திரம் ஸ்தாபகர் கெ தேவதாஸ்உம் சிறப்பு வருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இலங்கை இனப்பிரச்சினையை தொட்டுச் சென்ற தமிழகத்தில் வெளியான தென்னாலி, கன்னத்தில் முத்தமிட்டால் போன்ற படங்கள் பற்றி தனது கருத்தை வெளியிட்ட போதே தயானந்தா மேற்படி கருத்தை வெளியிட்டார். இதனை மறுத்து கருத்துத் தெரிவித்த தேவதாஸ் ராஜிவ்காந்தியின் படுகொலைக்குப் பின் ஈழத்தமிழர்களின் பிரச்சினையை தமிழக மக்களுக்கு எடுத்துக் காட்டிய படமாக இது தமிழகத்தில் பார்க்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

கன்னத்தில் முத்தமிட்டால் படம் பற்றி கருத்துத் தெரிவித்த தயானந்தா இப்படம் பல விருதுகளை வென்றது ஆனால் ஈழப்பிரச்சினையை சரியாகச் சொல்லவில்லை என்று குறிப்பிட்டார். இதற்கு பதிலளித்த சினி விமர்சகர் யமுனா ராஜேந்திரன் கன்னத்தில் முத்தமிட்டால் படத்திற்கு கிடைத்த விருதுகள் தொழில்நுட்பம் சம்பந்தப்பட்ட அம்சங்களுக்கு கிடைத்த விருதுகளே அன்றி அதன் கதையம்சத்திற்கு கிடைத்த விருது அல்ல என்று தெளிவுபடுத்தினார்.

இச்சந்திப்பில் ஈழத்து சினிமாவை அளக்க தமிழக சினிமாவை ஒரு அளவுகோலாக கொள்ள முடியாது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது. அங்கு கருத்து வெளியிட்ட சாந்தகுணம் கோடம்பாக்கத்து குப்பைகளுக்குப் பதில் ஈழத்துக் குப்பைகளை ஆதரிக்க முடியாது என்று குறிப்பிட்டார்.

அச்சந்திப்பில் கலந்து கொண்ட பத்மநாப ஐயர், அருணா செல்லத்துரை, யமுனா ராஜேந்திரன் போன்றோர் தரமான படைப்புகளைப் படைக்க பயிற்சிகளின் அவசியத்தையும் தொழில்நுட்ப அறிவையும் வலியுறுத்தினர். ஆனால் படைப்பாளிகளை பயிற்சிகளினூடாக உருவாக்க முடியாது எனக் குறிப்பிட்டார் தயானந்தா. தொழில்நுட்ப அறிவைப் பெற்றுத் தான் படம் எடுக்க வேண்டும் என்றால் முதல் கமராவை கண்டு பிடித்து முதல் காட்சியை பதிவு செய்தவர் யாரிடம் பயிற்சி பெற்றார் என்று கேள்வி எழுப்பினார் தேவதாஸ்.

சிறப்பு விருந்தினர்களுடைய இந்த வாதம் நடைமுறைக்கு ஒவ்வாது என்பதும் படைப்பாளிகள் பயிற்சிகளினூடாக உருவாக்கப்படாவிட்டாலும் பயிற்சிகள் அவர்களை செழுமைப்படுத்தி மேலும் மேலும் வளர்த்து விடுகின்றது என்பது கூட்டத்திற்கு வெளியே உறுதியாகத் தெரிவிக்கப்பட்டது.

# ஆண்களால் உருவாக்கப்படும் பெண்கள்




சுரேஸ், தேவதாஸ், ஜோசப்

திரைக்குப் பின்னால் ஆணாதிக்கம் இருக்கின்றது. ஆண்களால் உருவாக்கப்படும் பெண்களையே சினிமாவில் நாம் பார்க்கிறோம் என்றும் இந்நிலையை மாற்ற பெண்கள் முன்வர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார் சலனச்சித்திரம் அமைப்பின் ஸ்தாபகர் கெ தேவதாஸ். தேவதாஸ் தலைமையில் ஒக்ரோபர் 4ம் திகதி வடக்கு இலண்டனில் இடம்பெற்ற கூட்டத்திலேயே தேவதாஸ் இந்தக் கருத்தை வெளியிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் பெண்கள் வீட்டிற்குள் இருக்க வேண்டும் என்று கம்பவாருதி ஜெயராஜ் விளக்கம் அளிக்கையில் கை தட்டியவர்களில் அரைவாசிப் பேர் பெண்கள் என்றும் இந்நிலையை பெண்கள் தான் மாற்ற வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் ஈழவர் திரைக்கலைமன்ற ஸ்தாபகர் ஜோசப், தகிட தகிட சுரேஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# இலண்டன் தமிழ் படங்கள் இலங்கையில் திரையிடப்படும்



குறும்பட இயக்குனர் மைக்கல், நடிகர் டேவிட்

இலண்டன் உட்பட புலம்பெயர்ந்த நாடுகளில் தயாரிக்கப்படும் குறும் படங்கள், மற்றும் மூழு நீளப் படங்களை இலங்கையில் திரையிட உறுதி அளிக்கப்பட்டு உள்ளது. ஒக்ரோபர் 5ம் திகதி சினிமா ஆர்வலர் ஜனகனின் தலைமையில் வோல்தம்ஸ்ரோவில் இடம்பெற்ற கூட்டத்தில் இவ்வுறுதி அளிக்கப்பட்டது. ஐரோப்பிய மண்ணில் பல குறும் மற்றும் முழு நீளப்படங்கள் தயாரிக்கப்பட்ட போதும் அது பரந்த அளவு மக்களைச் சென்றடையவில்லை. இந்நிலையை மாற்றி புலம்பெயர்ந்த படைப்புகளை மக்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கில் படங்களின் தரத்தை பெரிதாகக் கொள்ளாமல் அவற்றை திரையிட முடிவு செய்யப்பட்டது.

இதன் முதற் கட்டமாக இரகசிய சிநேகம் இயக்குநர் கீர்த்தியின் படங்களை இலங்கையில் உள்ள சலனச் சித்திரத்தினூடாகத் திரையிட முடிவு செய்யப்பட்டு உள்ளது. மக்களுக்கு இலங்கைத் தமிழ் சினிமாவை அறிமுகம் செய்து வைக்க வேண்டும் எனவும் மக்களை எமது படங்களைப் பார்க்க வைக்க வேண்டும் எனவும் அங்கு கருத்து முன் வைக்கப்பட்டது.

புலம்பெயர் சினிமாவை ஊக்கப்படுத்தி அதனை சந்தைப்படுத்துவதற்கு பொதுவான அமைப்பு ஒன்றின் அவசியம் அங்கு சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால் அமைப்புகளை உருவாக்கி அவற்றை செயற்படுத்த முடியாத நிலை ஏற்படுவதால் புதிய அமைப்புகளை ஏற்படுத்தாமல் தற்போது செயற்படும் ஈழவர் திரைக் கலை மன்றம் சலனச் சித்திரம் போன்ற அமைப்புகளை முழுமையாக பயன்படுத்துவதே பொருத்தமானது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இச்சந்திப்பில் கலந்து கொண்ட பெங்களூர் தமிழரும் திரைப்படத்துறையில் பட்ட மேற்படிப்பை மேற்கொள்பவருமான உமாகாந்தன் புலம்பெயர் படங்களை பெங்களூரில் திரையிட உறுதி அளித்தார். இக் கூட்டத்தில் இயக்குநர்கள் தேவதாஸ், சீவகன், ரஞ்சன், கீர்த்தி, மைக்கல், விமர்சகர்கள் புஸ்பராஜன், ஜெயக்குமார், சந்தைப்படுத்தல் முகவர் கஜேந்திரன், நடிகர்கள், சினிமா ஆர்வலர்கள் என பல தரப்பினரும் கலந்து கொண்டனர்.

# பொலிஸ் அதிகாரியின் குழப்பம் தந்த கருத்து

"இப்போது மெற்றொபொலிட்டன் பொலிஸில் கறுப்பர்களும் ஆசியர்களும் சேரக் கூடாது" என தலைமை இன்ஸ்பெக்ரர் லீரோய் லோகன் தெரிவித்த கருத்து மெற்றோபொலிட்டன் பொலிஸ் இந்து அமைப்பின் கருத்து அல்ல என அவ்வமைப்பின் தலைவர் பொலிஸ் அலுவலர் மகேஸ் நந்தா தெரிவித்து உள்ளார். இந்து பொலிஸ் அலுவலர்களை இணைக்க தாங்கள் மேற்கொண்டுள்ள முயற்சிக்கு லீரோய் லோகனின் கருத்து எவ்விதத்திலும் உதவாது என அவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் தாங்கள் இந்து பொலிஸ் அலுவலர்களை சேர்த்துக் கொள்ள மிகவும் பிரயத்தனம் செய்து வருவதாகத் தெரிவித்தார்.

மெற்றோபொலிட்டன் பொலிஸார் தங்கள் சேவையை சமூகத்திற்கு வழங்கும் போது அச்சமூகத்தை அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தி இருக்க வேண்டும் என்ற கருத்து தற்போது உணரப்பட்டு உள்ளது. ஆயினும் பொலிஸ் பிரிவில் சிறுபான்மை இனத்தவர்களின் வீதம் மிகவும் குறைவாகவே உள்ளது. இந்நிலை மாற்றப்பட்டு சிறுபான்மை இனத்தவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

For News & Advertising: 020 8952 5677 For Distributions : 020 8905 7775

# பொலிஸ் - வோல்தம்ஸ்ரோ தமிழர்கள் சந்திப்பு

வோல்தம்ஸ்ரோ பொலிஸார் அப்பகுதி தமிழர்கள் சிலரைச் சந்தித்து உள்ளனர். இச்சந்திப்பு ஒக்ரோபர் 10ம் திகதி TR-TEC இல் இடம்பெற்று உள்ளது. அண்மைக் காலமாக இப்பகுதி இளைஞர்கள் சிலர் வன்முறையில் ஈடுபட்டு வருவது தொடர்பாக ஸ்கொட்லண்ட்யாட் தனது கவனத்தைச் செலுத்தி வருகிறது. இச்சந்திப்பில் TR-TEC சார்பில் எஸ் வி மூர்த்தி, கற்பக விநாயகர் ஆலய நிர்வாகத்தினர் சார்பில் ராஜகோபல், தமிழ்ச் சங்கம் சார்பில் நவநாயகம், குகச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பை கணக்காளர் சிவகுணம் ஏற்பாடு செய்திருந்தார். இச்சந்திப்பில் வோல்தம்ஸ்ரோ தலைமை பொலிஸ் அதிகாரிகளான கொலின் உவைற், கரத் மோர்கன் ஆகியோர் கலந்து கொண்டனர். வோல்தம்ஸ்ரோ இளைஞர்களை வன்முறையில் ஈடுபடாமல் எப்படித் தவிர்க்கலாம் என்பது பற்றி அச்சந்திப்பில் கருத்துகள் பரிமாறப்பட்டது.

கற்பக விநாயகர் ஆலய கார் தரிப்பிடத்தில் கோஸ்டி மோதல் ஒன்று ஏற்பட இருந்ததாகவும் அதில் ஆலய நிர்வாகிகளில் ஒருவரான இரவீந்திரமோகன் தலையிட்டு அதனைத் தடுத்ததாகவும் தெரியவருகிறது. இதனை அடுத்தே பொலிஸாருடனான சந்திப்பு இடம்பெற்று உள்ளது.

இச்சந்திப்பில் ஆலய கார்தரிப்பு நிலையம் இருட்டாக இருப்பதும் அதன் அருகில் உள்ள பொதுக் கழிப்பிடம் தகாத செயல்களுக்கு பயன்படுத்தப்படுவதும் பொலிஸாரால் சுட்டிக்காட்டப்பட்டது. இச்சந்திப்பு ஓரளவு பயனுள்ளதாக இருந்தது எனக் குறிப்பிட்ட எஸ் வி மூர்த்தி குறிப்பிடத்தக்க எந்த முடிவும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவித்தார். இவ்வாறான தொடர்ச்சியான சந்திப்புகள் மூலம் வன்செயல்கள் இடம்பெறுவதைக் கட்டுப்படுத்த முடியும் என எஸ் வி மூர்த்தி உதயனுக்குத் தெரிவித்தார்.

பிரித்தானிய சட்டத்தில் உள்ள சில பிரிவுகள் வன்முறையாளர்களால் பயன்படுத்தப்படுவது பற்றி பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டு உள்ளது. குறிப்பாக வன்முறையில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டு சில தினங்களில் விடுவிக்கப்படுவது, ஒரு சிலர் மட்டுமே தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டது போன்ற விடயங்களும் அங்கு பேசப்பட்டு உள்ளது.

கற்பக விநாயக ஆலயம் இளைஞர்களை நல்வழிப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட முடியும் என்று பொலிஸார் கருத்துத் தெரிவித்து உள்ளனர். இதே கருத்தை தமிழ் மக்களும் கொண்டுள்ளனர். சில தமிழ் அமைப்புகளும் ஆலயங்களும் தமது தனிப்பட்ட கோப தாபங்களைத் தீர்த்துக்கொள்ள இந்த இளைஞர் குழுக்களைப் பயன்படுத்தி வருகின்றது என்ற குற்றச்சாட்டு இருக்கின்றது என்று உதயனுக்குத் தெரிவிக்கும் வோல்தம்ஸ்ரோவைச் சேர்ந்த சிவக்குமார், தமிழ் அமைப்புகள் இந்த வன்முறையைக் கட்டுப்படுத்துவதில் முக்கிய பங்கெடுக்க முடியும் என்று குறிப்பிட்டார். சிவகுமார் மேலும் குறிப்பிடுகையில் இந்தப் பெரிய மனிதர்கள் கூட்டம் போடும் போதே பொலிஸார் பாதுகாப்பு வழங்க வேண்டிய துர்பாக்கிய நிலை இருப்பதாக கவலை தெரிவித்தார்.

# தமிழகத்தில் நடந்த விபத்தில் யாழ் குடும்பத்தின் மூன்று தலைமுறையினர் மரணம்

நீண்டகாலம் சென்னையில் வாழ்ந்த யாழ்ப்பாணக் குடும்பத்தினர் ஐவர் திருச்சியில் இடம்பெற்ற விபத்தில் பரிதாபமாக இறந்தனர். ஒரே குடும்பத்தின் மூன்று தலைமுறையினர் பலியாகி உள்ளனர். இச்சம்பவம் ஒக்ரோபர் 12 அதிகாலை இடம்பெற்றது. இலங்கையில் தந்தையின் இறுதிக்கிரிகைகளில் கலந்து கொண்டுவிட்டு திருவனந்தபுரம் வந்த இந்திராணி நகுலராஜா (54)வை அழைத்துக் கொண்டு வந்த வேன் லொறியுடன் மோதியதில் இப்பரிதாப மரணம் சம்பவித்தது. தமிழகத்தைச் சேர்ந்த சாரதி உட்பட ஆறு பேர் தலத்திலேயே உயிரிழந்தனர். சில வாரங்களுக்கு முன் சென்னைக்கு வேலை தேடி வந்த இலங்கைத் தமிழர்கள் சிலர் விபத்தில் உயிரிழந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

முதல் நாள் இரவு திருவனந்தபுரம் வந்திறங்கிய இந்திராணியை அழைத்து வர சென்னையில் இருந்து குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் சென்றிருந்தனர். அன்றிரவே திருவனந்தபுரத்தில் இருந்து சென்னைக்கு திரும்புகையில் திருச்சியில் இவ்விபத்து இடம்பெற்றது. சாரதி உட்பட எட்டுப் பேர் பயணம் செய்த வாகனத்தில் இருவர் மட்டுமே உயிர் தப்பினர்.

கனடாவில் உள்ள இந்திராணியின் கணவர் நகுலராஜா தனது குடும்பத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்ள சென்னைக்கு புறப்பட்டு உள்ளார். ஒரே சமயத்தில் தனது குடும்பத்தில் பலரை இழந்த அவரிற்கு இது பேரிடியாகி உள்ளது. இலண்டனில் வாழும் மகன் கணேஸ் தனது உறவுகளைப் பார்க்க செல்ல முடியாத நிலையில் உள்ளார். வெவ்வேறு பாகங்களில் வாழும் உறவுகள் இறுதி வரை சந்திக்க முடியாமலேயே பிரிந்து உள்ளனர்.

இந்திராணி நகுலராஜா(54), அவரது மகள் அருந்ததி(29), அருந்ததியின் மகள் இந்திராணியின் பேத்தி கௌசிகா (3), மகன் முரளி(19) மருமகன் கதிர்(29) ஆகியோரே இவ்விபத்தில் உயிரிழந்தனர். இந்திராணியின் மற்றொரு மகளும் கதிரின் மனைவியுமான சர்மிளா உயிருக்காகப் போராடிக் கொண்டுள்ளார். சர்மிளாவுக்கும் கதிருக்கும் அண்மையிலேயே பதிவுத் திருமணம் நடந்துள்ளது. இவர்களுடன் பயணம் செய்த செந்தில்குமார் என்பவர் உயிர் தப்பி உள்ளார்.


இச்சம்பவம் பற்றி உதயனுக்குத் தெரிவித்த இலண்டனில் வாழும் மகன் கணேசின் நண்பர், தாய் இந்திராணியின் சகோதரர் குணசேகரம் குடும்பத்தினர் இந்தியா செல்ல உள்ளதாகவும் தெரிவித்தார். ஆறுதல் சொல்ல வார்த்தை இன்றித் தவிப்பதாக அவர் மிகுந்த துயரத்துடன் இச்செய்தியை பகிர்ந்து கொண்டார்.

இவ்விபத்துக்கள் பற்றி தமிழகத்தில் நீண்டகாலம் வாழும் அசோக் என்பவரிடம் கேட்டபோது இவ்வாறான விபத்துக்கள் தமிழகத்தில் சர்வசாதாரணமாக இருப்பதாகத் தெரிவித்தார். இங்கு இரவில் நீண்ட தூரப் பயணங்களை முற்றாகத் தவிர்க்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். தான் கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக வாழ்வதாகக் குறிப்பிட்ட அவர் தொழில் காரணமாக தான் அடிக்கடி நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டி இருந்தாலும் இரவில் பயணம் செய்வதில்லை என்று குறிப்பிட்டார். விபத்துப் பற்றிய ஆய்வுகள் கூட அதிகாலையில் விபத்து ஏற்படுவதற்கான சாத்தியம் அதிகம் உள்ளதை சுட்டிக்காட்டுகின்றது.

# சந்தாவை புதுப்பிக்க மறுப்பு

பல தமிழ் தொலைக்காட்சிகள் இலவசமாக இயங்குவதால் சந்தாவை புதுப்பிப்பதிலும் சந்தாவைப் பெறுவதிலும் வீழ்ச்சி ஏற்பட்டு உள்ளது. அனைத்துத் தொலைக்காட்சிகளும் சினிமாவை மையமாக வைத்துச் செயற்படுவதால் தனக்கு எதைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதில் எந்தக் குழப்பமும் இல்லை என்கின்றனர் கரோவைச் சேர்ந்த மாதவன் குடும்பத்தினர். எல்லோரும் சினிமாவைக் காட்டுவதால் எது இலவசமாக வேலை செய்கிறதோ அதனைப் பார்க்கலாம் என மாதவன் உதயனுக்குத் தெரிவிக்கிறார். எந்தத் தொலைக்காட்சி கூடுதலாக புலம்பெயர்ந்த, தாயக விடயங்களையும் சினிமாவுடன் மாறுபட்ட நிகழ்ச்சிகளையும் தரமாக வழங்குகிறார்களோ எமது படைப்புகளுக்கு முன்னுரிமை கொடுக்கிறார்களோ அந்தத் தொலைக்காட்சிக்கு சந்தா செலுத்தலாம் என்கிறார் ரூற்றிங்கில் வாழும் ரஞ்சினி தயாபரன்.

# அன்பு இல்லத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் நன்கொடை



கண்ணன் - பாலச்சந்திரன்

கிழக்கு இலண்டன் வர்த்தகப் பிரமுகர் கண்ணன் (ராஜன்) ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான ஆடைகளை திருமலையில் உள்ள அன்பு இல்லத்திற்கு அன்பளிப்புச் செய்துள்ளார். ஒக்ரோபர் 13ம் திகதி தென்மேற்கு இலண்டன் Balaham பகுதியில் உள்ள Perma சர்வதேச கப்பல் நிறுவனத்தினூடாக இவ்வாடைகள் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது. நவம்பர் 5ல் கொழும்பைச் சென்றடையும் ஆடைகள் அங்கிருந்து மேற்படி நிறுவனத்தினரால் திருமலையில் உள்ள அன்பு இல்லத்திற்கு கொண்டு செல்லப்பட்டு ஒப்படைக்கப்படும்.

இவ்வேற்பாட்டை அகதிகள் புனர்வாழ்வு மற்றும் மனித உரிமைகளுக்கான இயக்கப் Movement for Refugee, Rehabilitation and Human Rights பொறுப்பாளர் எஸ் பாலச்சந்திரன் மேற்கொண்டார். எஸ் பாலச்சந்திரனிடம் கண்ணன் உத்தியோகபூர்வமாக ஆடைகளை கையளித்தார்.

சில மாதங்களிற்கு முன் திருமலைக்கு சென்று வந்த ஆர் சுகேந்திரன் (சுகா) அன்பு இல்லத்திற்குச் சென்று அங்கிருந்த நிலைமைகளை நேரில் அறிந்திருந்தார். அதனால் உந்தப்பட்ட சுகேந்திரன் அன்பு இல்லத்திற்கு சில உதவிகளை செய்ய வேண்டும் என்ற முனைப்பில் கண்ணனுடன் இணைந்து செயற்பட்டு அவற்றை அனுப்புவதற்கான செலவை பொறுப்பேற்றார்.

தாயக மக்களுக்கு தன்னார்வத்துடன் உதவிகளை நேரடியாக மேற்கொள்வதே அவ்வுதவிகள் அம்மக்களைச் சென்றடைய உகந்த வழி என யாழ் அரோட் அமைப்பின் பொறுப்பாளர் டொக்டர் சிவராஜா உதயனுக்குத் தெரிவித்து இருந்தார். அமைப்புகளினூடாக உதவிகள் வழங்கப்படும் போது சில சமயம் எண்பது வீதமான உதவிகள் நிர்வாகச் செலவுகளுக்கு செலவிடப்படுவதாகவும் முறைகேடுகளுக்கு வழி கோலுவதாகவும் அவர் தெரிவித்து இருந்தார். இதனைத் தவிர்க்க நேரடியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை வழங்குவதே உகந்தது. இவ்வாறு உதவிகளை வழங்குபவர்கள் அதனை உதயனுக்குத் தெரியப்படுத்தி அதனை பலருக்கும் அறியப்படுத்துங்கள். அது இன்னும் பல நல்ல உள்ளங்களை உதவி செய்யத் தூண்டும்.

# நாட்டிய நாடகம்

யூனிவேர்சிற்றி ஒப் இலண்டன், லோகன் மண்டபத்தில் திருமாணிக்கவாசகர் நாட்டிய நாடகம் இடம்பெற உள்ளது. நவம்பர் 8ம் திகதி இடம்பெற உள்ள இந்நாட்டிய நாடகத்தை இலண்டன் கலாலயம் நாட்டியப் பள்ளிமாணவர்கள் வழங்க உள்ளனர். இப்பள்ளி கலேச்சேத்திராவின் பழைய மாணவர்களால் நடத்தப்பட்டு வருவதாக கெ கெ ரகுநாதன் உதயனுக்குத் தெரிவிக்கிறார். இந்நிகழ்ச்சியில் சேர்க்கப்படும் பணம் 2000 இருக்கைகள் கொண்ட மண்டபம் ஒன்றை அமைக்கவும் நாட்டியப் பள்ளியை அமைக்கவும் பயன்படுத்தப்படும் எனவும் ரகுநாதன் தெரிவித்தார்.

**INDIAN FUNERAL DIRECTORS**

We now operate from our new, modern & fully equipped premises on Mollison Way, Edgware.

Our comprehensive service includes:-

- Large prayer room (Mandir) for performing the last funeral rites or for paying the last respects
- All religious rites, ceremonies and wishes respected and administered
- Modern, fully equipped washing & dressing facilities
- Funeral ceremony items provided

**Tel: 020 8952 5252**

SANJAY or BHARAT SHAH (formerly of Kenton Road)
44 South Parade, Mollison Way, Edgware,
Middlesex HA8 5QL.
MOBILE: 0777 030 66 44

ADVT.

# UNBEATABLE PRICES

*** TILES * MARBLE * GRANITE * KITCHENS * BATHROOM * WOODFLOORING * FURNITURE**

**MASSIVE SALE**





**MASSIVE SALE**

# ELITE

ELITE TILES are undeniably UK's No.1
Importers, Distributors, Wholesalers and Retailers
of




*Specialists in Granite Worktops and Marble Vanity Tops to order*




## £2 MILLION POUNDS OF AVAILABLE STOCK TO CLEAR

**(collect same day)**

Web Site: www.elite-tiles.co.uk

**020 8202 1806 (12 lines)**
**020 8202 8608 (Fax)**

**Elite House, The Broadway,**
**West Hendon, London, NW9 7BP**

Open Mon-Fri 8.30am-6pm – Sat 10am-5pm – Sun 10am – 2pm

# புதியவனின் மாற்று படத்திற்கு மிகுந்த வரவேற்பு


## மாற்று - ஒரு வளர்ச்சியை நோக்கிய படைப்பு

புலம்பெயர்ந்த சினிமாவின் தேவை பற்றி பரவலாக பேசப்படும் சுழலில் புதியவனின் மாற்று வெளிவந்து உள்ளது. இதன் முதற் காட்சி ஒக்ரோபர் 4ல் கரோவில் காண்பிக்கப்பட்டது. அதற்கு மறுதினம் ரூற்றிங்கில் இரு காட்சிகள் இடம்பெற்றது. 500ற்கும் அதிகமானவர்கள் பார்த்து தம் பாராட்டுக்களை தெரிவித்ததுடன் தொடர்ந்தும் படைப்புகளை கொண்டு வரும்படி அக்கலைஞர்களை கேட்டு உள்ளனர். சினிமா விமர்சகர்கள் இப்படம் இன்னமும் முன்னேறுவதற்கு இடம் உண்டு என்பதை சுட்டிக்காட்டி இப்படத்தினை வரவேற்று உள்ளனர். புலம்பெயர்ந்த சினிமா வளர்ச்சிப் பாதையில் செல்கிறது என்பதை புதியவனின் மாற்று மீண்டும் ஒரு தடவை உறுதிப்படுத்தி உள்ளது.

புலம்பெயர்ந்து வந்த ஒரு பெண்ணின் அவலத்தை பிரதிபலிக்கும் உண்மைக் கதை, இந்தக் கலைஞர்களால் ஒரு படமாக்கப்பட்டு உள்ளது. வேந்தனின் இசையில் பொபியின் ஒளிப்பதிவில் புதியவன் இப்படத்தினை இயக்கி உள்ளார். வாசுதேவன், காந்தன், தீப்தி, கலைச்செல்வன் மற்றும் பலரின் நடிப்பில் மாற்று வெளிவந்து உள்ளது. புதியவன், கலைச்செல்வன் தவிர்ந்த அனைத்து கலைஞர்களுக்கும் இது முதற் படமாக இருந்த போதும் குறிப்பிடத்தக்க அளவில் அனைவரும் தம் திறமைகளை வெளிப்படுத்தி உள்ளனர். பிரியாலயா அனுசரணையுடன் மதுரா கிரியேசன்ஸ் தயாரித்து உள்ள இப்படத்தை ஈழத் திரைப்பட நண்பர்கள் வெளியிட்டு உள்ளனர்.

திருமணம், காதல், நட்பு, பாசம், வன்முறை என வாழ்வியலின் வெவ்வேறு அம்சங்களையும் இப்படத்தில் காட்ட முற்பட்டு ஓரளவு வெற்றியும் கண்டுள்ளனர். கதையம்சம் நிறைந்த இப்படத்தில் தொழில்நுட்பத்தரத்தின் அவசியம் தெரிகிறது. அதனை கலைஞர்களும் உணர்ந்து உள்ளனர்.

இலண்டனின் பல்வேறு பாகங்களிலும் இப்படம் திரையிடத் திட்டமிடப்பட்டு உள்ளது. கென்டனில் நவம்பர் 14இலும் சவுத்தொலில் நவம்பர் 15இலும் சேர்பிற்றனில் நவம்பர் 23இலும் இப்படம் திரையிடப்பட உள்ளது. கென்டனில் காண்பிக்கப்படும் காட்சிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர்கள் அனுசரனை வழங்குகின்றனர். புலம்பெயர்ந்த படைப்புகளை ஊக்குவிக்க வேண்டிய கடமை புலம்பெயர்ந்த மக்களுக்கு உண்டு. இப்படத்தினைப் பார்த்து தங்கள் விமர்சனங்களை தெரியப்படுத்துவதன் மூலமே புதியவனை புதிய கோணங்களில் சிந்திக்கத் தூண்டமுடியும். "ஈழத்தமிழருக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும், ஈழத் தமிழர்களை முன்னேற்ற வேண்டும், என்று கூறிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது ஈழத் தமிழர்களின் படைப்புகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்" என்ற இயக்குனர் அஜீவனின் கூற்று இங்கு பொருத்தமானது.



# தாயகத் தொலைக்காட்சிகள் எதிரும் புதிரும்

வன்னியில் Boys திரைப்படத்தை திருட்டுத்தனமாக பார்த்த சிலர் கடுமையாகத் தாக்கப்பட்டு உள்ளனர். ஆனால் ஐரோப்பாவில் Five Star என்ற பெயரில் திருட்டுத்தனமாக வெளியிடப்பட்ட படத்தை பார்க்காமல் முத்திரை பதித்து வெளியிடப்படும் Boys படத்தை பார்க்கும் படி விளம்பரம் செய்யப்படுகிறது.

கமலின் நளதமயந்தி படம் இலங்கைத் தமிழர்களின் பண்பாட்டை கொச்சைப்படுத்துவதாக குற்றம்சாட்டப்பட்டது. ஆனால் தாயகத் தொலைக்காட்சி ஒன்று அதனை முந்திக்கொண்டு ஒளிபரப்புச் செய்தது.

தமிழகத் தொலைக்காட்சிகள் நேரடியாக .தங்கள் ஒளிபரப்புகளை ஆரம்பித்து விட்டார்கள். தாயகத் தொலைக்காட்சிகளை ஆதரிக்க வேண்டும் என்று ஒரு கோசம் எழுந்தது. ஆனால் தாயகத் தொலைக்காட்சிகளிலும் பெரும்பாலும் ஜெயா டிவி, ராஜ் டிவி, சன் டிவி, விஜய் டிவி நிகழ்ச்சிகள் தான் ஒளிபரப்பாகின்றன.


இந்து தகவல் ஏடு

இரண்டாம் வெளியீடு 2003

மிக அதிக புதிய விளக்கங்களுடன்

விரைவில் வெளிவருகிறது




கண்ணியமான நல்ல நோக்குடன் வெளிவரும் இந்த இந்து சமய தகவல் ஏட்டினை ஒவ்வொருவரும் விரைந்து சென்று பெற்றிடுவீர்

இலவசம்

இலவசம்

இலவசம்

RehncyShaheen
Chartered Accountants
www.rehncyshaheen.com

Our Services include

* Auditing
* Cashflow & Management Accounting
* Client Accounting Services
* Business Start-up
* Back Duty Investigation (Tax & VAT)
* Taxation

We have associates in Tanzania as well. Our team includes members of the Institute of Chartered Accountants in England & Wales, Chartered Association of Certified Accountants and Chartered Institute of Taxation.
We provide partner led accounting and business services formulated to meet the requirements of a wide range of clients. Our philosophy is a personal approach together with a prompt and dedicated attention to our clients' needs.
Almost every business decision has a taxation implication, some being short-term, others having an effect many years hence. Our special tax department works closely with clients to help them through the maze, planning ahead so that the incidence of tax is minimised.
We are proud of our exceptional success rate in dealing with Back Duty Investigations (both Inland Revenue & Customs & Excise) howsoever complicated or involved they may be.

For Information:
Mr. Rehney MA FCA FCCA CTA AIIT MCMI ACIArb
Middx. Offices: 020 8864 9065 020 8813 8324
1276/1278 Greenford Road, Greenford, Middx UB6 0HH.
Mr. A M Shaheen MA LLB ACEA MCMI
South London Office 020 7223 8221
189 Lavender Hill, London SW11 5TB



LONDON BUILDING SUPPLIES

Tel: 020 8453 0880

Building Materials
Bricks
Blocks
Plaster
Cement
Sand
Aggregates
Concrete



Decorating Materials
Paints
Tools
Ladders
Doors
Windows
Key Cutting
Protective Clothes

Hard Landscaping Display for your IDEAS

அனைவரையும் வரவேற்கின்றோம்

Abbey Road, Park Royal NW10

இறையருள் அரசி அன்னை காயத்ரி



வேதனைகள் தீர்க்க வல்லவர், குறைகளை போக்கிட வல்லவர் இறையருள் அரசி அன்னை காயத்ரி.

உங்களின் வாழ்கையில் ஏற்படும் துன்பங்கள் மாறிடவும் தடைகள் யாவும் விலகிடவும் காணுங்கள் அன்னையின் தரிசனம், விலகாத நோய் விலகும், தீராத பினி அகலும், மாறாத வேதனைகள் யாவும் நீங்கும், உங்களின் பிரச்சனைகள் எதுவாயினும் தடைநீங்கி வழி பெற்றிட தொடர்பு கொள்ளுங்கள்

020 8952 7775

BEST TRADE CENTRE

Need a Car ?
Can't get finance ?
WE CAN HELP
No Deposit - Drive away
TODAY in
one of our great cars
NO Application Refused
CALL
020 8514 0988
763 Romford Road, Manor Park E12
Email: info@besttradecentre.co.uk

16 Minerva Road
Park Royal
London NW10 6HJ UK

Shiv Souvenirs Ltd
Importers and Wholesale Distributors
Fancy Goods TOYS
gifts Souvenirs
and many more
Tel: 020 8963 0512/3
Fax: 020 8963 0518
Email:shivsouvenirs@aol.com

# கராட்டி வல்லுனர்களுக்கு பாராட்டு விழா



கராட்டி வல்லுனர்களுக்கு பட்டி அணிவித்தலும் சான்றிதழ் வழங்குதலும் ஒக்ரோபர் 4ல் ஈஸ்ற்காமில் இடம்பெற்றது. சிகான் உசைனீஸ் எக்சகாய் இசன்றியூஸ் கராத்தே அமைப்பின் பிரித்தானியக் கிளை ஒழுங்கு செய்த இவ்வைபவத்தில் மருத்துவ ஆலோசகர் சிவபாதம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு வல்லுனர்களிற்கு சான்றிதழ்கள் வழங்கினார். சிவபாதத்துடன் அரசியல் ஆய்வாளர் வி சிவலிங்கமும் இவ்வமைப்பின் வளர்ச்சி பற்றி அங்கு உரையாற்றினார். அவர்கள் இருவரும் இவ்வமைப்பின் சமூக சேவை பற்றியும் வியந்துரைத்தனர்.

இவ்விழாவின் முக்கிய அம்சமாக தனபாலசிங்கம் ரஜீவன் (28), முத்துசாமி ராமதாஸ் (31) ஆகிய இருவருக்கும் கறுப்புப்பட்டி அணிவிக்கப்பட்டது. இக்கராத்தே அமைப்பின் வளர்ச்சியில் முன்னின்று செயற்பட்ட கந்தையா நாகேந்திரம், சின்னராஜா பாஸ்கரன் ஆகியோர் அங்கு கௌரவிக்கப்பட்டனர். இவ்வமைப்பின் செயலாளர் அப்புத்துரை நந்தகுமார் அவரது அயராத உழைப்பிற்காக பாராட்டப்பட்டார்.

கராத்தேயில் மிகுந்த ஆர்வம் உடைய கந்தையா இரவீந்திரன் 1997 டிசம்பரில் நால்வருடன் பிரித்தானியக் கிளையை ஆரம்பித்து பயிற்சிகளை வழங்கினார். கடந்த ஆறு ஆண்டுகளுக்குள் இவ்வமைப்பு தன்னை உறுதியான கட்டமைப்பாக நிலைநிறுத்திக் கொண்டு உள்ளது. இன்று இவ்வமைப்பில் 4 வயது முதல் 40 வயது வரை உள்ள 70க்கும் மேற்பட்டவர்கள் பயிற்சி பெறுகின்றனர். குழந்தைகள், பெண்கள், திருமணமான பெண்கள், வேலைக்குச் செல்லும் பெண்கள் என சமூகத்தின் பல்வேறு மட்டங்களிலும் உள்ளவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். விரைவில் முதியவர்களுக்கான தேகப் பயிற்சி போன்ற விடயங்களும் ஆரம்பிக்கப்பட உள்ளதாக இப்பயிற்சிக் கல்லூரியின் அதிபர் கந்தையா இரவீந்திரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

ஒரு முனையில் தமிழ் இளைஞர் கூட்டம் ஒன்று வன்முறையில் ஈடுபட்டு தம்மையும் சீரழித்து சமூகத்தையும் சீரழிக்க மறுமுனையில் கட்டுக்கோப்பான பயிற்சிகளினூடாக மெச்சத்தக்க வகையில் ஒரு இளையதலைமுறை உருவாகிக் கொண்டு வருகிறது. இவ்வமைப்பு சர்வதேச காரத்தே போட்டிகளில் கலந்து கொண்டு உலகக் கிண்ணத்தையும் வென்றுள்ளனர். இத்துறையில் இவர்களது வல்லமை குறித்து ஜப்பானிய கராத்தே சஞ்சிகை கட்டுரை ஒன்றையும் வெளியிட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச சம்பியன்களான இவர்கள் இளைய தலைமுறையினருக்கு ஒரு முன்னுதாரணமாக உள்ளனர். இவ்வாறான பயிற்சிகள் ஆளுமையையும் சமூகக் கட்டுப்பாட்டையும் இளைஞர் யுவதிகள் மத்தியில் தோற்றுவித்து அவர்களை நல்ல பிரஜைகளாக சமூகத்திற்கு வழங்குகிறது என ஆய்வுகள் தெரிவிக்கின்றது.

# வடக்கு இலண்டனில் களவுகள்

வடக்கு இலண்டனில் சில தமிழ் வீடுகளில் களவுகள் இடம்பெற்று உள்ளது. இக்களவுகளில் தமிழர்களே ஈடுபட்டு உள்ளனர். வங்கிக் காப்பகங்களும் நிரம்பி இருப்பதால் நகைகளை வீட்டிலேயே வைத்திருக்க வேண்டி இருப்பதாக தெரியவருகிறது. களவாடப்பட்ட வீடுகள் பற்றிய முழுவிபரங்களையும் அறிந்து கொண்டே களவில் ஈடுபட்டு உள்ளனர். களவில் தமிழர்களும் சம்பந்தப்பட்டு இருப்பதால் பறிகொடுத்தவர்கள் அது பற்றி பத்திரிகைக்கு தகவல் தர அஞ்சுகின்றனர்.

# இலண்டனில் மலையகத் தமிழர் நிகழ்வு



**இடமிருந்து: கமலா ரவீந்திரன், மேனகா கந்தசாமி, கருப்பையா செல்வராஜா, தெளிவத்தை ஜோசப், மு நித்தியானந்தன், ஜெயசிங்கம்.**

இலங்கையின் மலையகத் தமிழர்களின் நிகழ்வு தெளிவத்தை ஜோசப்பின் வருகையை ஒட்டி நடத்தப்பட்டது. இலக்கிய நண்பர்கள் வட்டத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்விற்கு ரொறி கட்சியின் கவுன்சிலரும் மலையக இலக்கிய ஆர்வலருமான கருப்பையா செல்வராஜா தலைமை தாங்கினார். வோல்தம்ஸ்ரோ வை எம் சி ஏ இல் ஒக்ரோபர் 18ல் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு இலண்டனின் பல பாகங்களில் இருந்தும் மண்டபம் நிறைந்த அளவில் இலக்கிய ஆர்வலர்கள் பங்குபற்றினர். மலையகத்தின் மூத்த முன்னோடி எழுத்தாளரான தெளிவத்தை ஜோசப்பை கௌரவிப்பதுடன் மலையகத்தின் வாழ்வியலை வெளிக்கொண்டுவரும் நிகழ்வாகவும் இது அமைந்தது.

மலையகத் தமிழர்களின் தொழிற்சங்களில் பெண்களின் நிலை பற்றி மேனகா கந்தசாமி பேசினார். மலையகத்தில் போராடிய பெண்கள் வரலாற்றில் பதிவு செய்யப்படாமல் போனது பற்றி விளக்கியதுடன் தொழிற்சங்கங்களின் சுரண்டல்கள் பற்றியும் அவர் சுட்டிக்காட்டினார். மலையகக் கல்வியின் நிலையை தனது வாழ்வுடன் ஒப்பிட்டுப் பேசிய கமலா ரவீந்திரன் தனது கல்வி வளர்ச்சிக்காக தனது சகோதரியின் கல்வி தியாகம் செய்யப்பட்டதை கண்ணீர் மல்க ஒப்பிட்டார். தொடர்ந்து பேசிய விஜயசிங்கம் மலையக இளைய சமுதாயம் தோட்டங்களில் இருந்து வெளியே கொண்டுவரப்பட்டு பிரதான பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படுவதே மலையகத் தமிழர்களின் முன்னேற்றத்திற்கு ஒரே வழி எனத் தெரிவித்தார்.

மலையகத் தமிழர்களின் நூற்றாண்டுத் துயரத்தை ஆதாரபூர்வமாக செய்திக் குறிப்புகளுடன் வெளிப்படுத்திய கலாநிதி மு நித்தியானந்தன் கூலி என்ற பெயரால் ஒட்டுமொத்த மலையக சமூகமும் அழைக்கப்பட்ட கீழ்த்தரமான போக்கை உணர்ச்சி பூர்வமாக வெளிப்படுத்தினார். கௌரவப்படுத்தப்பட்ட எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் பேசும் போது மலையகத்தில் உள்ளவர்களுக்கு என்ன எழுதத் தெரியும் என்று அன்று மலையக எழுத்துக்கள் தள்ளி வைக்கப்பட்டதையும் இன்று மலையக எழுத்துக்கள் ஈழத்து இலக்கியத்தில் தனியிடத்தைப் பெற்றிருக்கும் நிலையையும் இடையே ஏற்பட்ட கடுமையான இலக்கியப் பயணத்தையும் விரிவாக விளக்கினார்.

தெளிவத்தை ஜோசப்பிற்கு க செல்வராஜாவும் மு நித்தியானந்தனும் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர். தன்னை இலண்டனுக்கு வரவழைப்பதில் உதவிய இலக்கியப் பேராளர் பத்மநாபஐயர், கலாநிதி மு நித்தியானந்தன், சட்டத்தரணி ரங்கன், ஐ பி சி சிவரஞ்சித் உட்பட அனைத்து நண்பர்களுக்கும் தனது நன்றியைத் தெரிவித்தார்.

ஐரோப்பாவில் அண்மைக்காலத்தில் மலையகம் பற்றி இடம்பெற்ற முக்கிய நிகழ்வாக இது கருதப்படுகிறது. அந்த மக்களின் நூற்றாண்டுத் துயர் அங்கு வந்திருந்தவர்களால் உணரப்பட்டு இருந்தால் அந்நிகழ்வு வெற்றிக்குரியது எனக் குறிப்பிட்டார் அதில் கலந்துகொண்ட ஒருவர்.

# தமிழ் அமைப்புகள் சமூகப் பொறுப்பற்றவை - அதிபர் இரவீந்திரன்

கராத்தே பாராட்டு விழா தொடர்பாக எக்சகாய் பயிற்சிக் கல்லூரி அதிபர் கந்தையா இரவீந்திரனுடன் தொடர்பு கொண்ட போது தமிழ் அமைப்புகள் பற்றி கடுமையான விமர்சனத்தை வெளியிட்டார். இப்பொது அமைப்புகள் சமூகப் பொறுப்பற்றவை என்று குற்றம் சாட்டிய இரவீந்திரன் இளைஞர்களை நல்வழியில் ஊக்குவிக்கும் எம்மை தட்டிக் கொடுக்கக் கூட இவர்கள் தயாராக இல்லை என்று குற்றம்சாட்டினார். இளைஞர்கள் வன்முறையில் ஈடுபடுவதாக குற்றம்சாட்டும் இந்தப் பொது அமைப்பினர் அவ்விளைஞர்களை நல்வழிப்படுத்த எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. நாம் இளைஞர்கள் இணைந்து வெற்றிகரமாக ஒரு தீர்வை செயற்படுத்தி வருகிறோம். ஆனால் அதற்கு கைகொடுக்க இந்த அமைப்புகள் தயாராக இல்லை.

இந்த இளைஞர்களின் பாராட்டு விழாவிற்கு கிழக்கு இலண்டனில் உள்ள தமிழ் பொது அமைப்புகளை நேரில் சென்று அழைத்திருந்தோம் ஏனைய அமைப்புகளுக்கு தபாலில் அழைப்பு அனுப்பி இருந்தோம். ஆனால் யாரும் கலந்து கொள்ளவில்லை. ஏன்? சம்பளம் பெற்று சமூகசேவை செய்யும் இவர்களுக்கு எந்த சமூக அக்கறையும் இல்லை என இரவீந்திரன் மிகுந்த கோபத்துடன் பதிலளித்தார்.

குடும்பப் பெண்கள், மற்றும் வேலைக்குச் செல்லும் பெண்களுக்கான பயிற்சிகளை இலவசமாக வழங்குகிறோம். கடந்த ஓராண்டு காலமாக பயிற்சி நிலையத்திற்கான கட்டணத்தையும் நாங்களே செலுத்தி வருகிறோம் எனத் தெரிவித்த இரவீந்திரன் பயிற்சிகளை வழங்க எங்களுக்கு ஒரு நிரந்தர இடம் தேவை எனத் தெரிவித்தார். பயிற்சிக்கான இடத்தையோ அவ்விடத்திற்கான கட்டணத்தையோ பெற்றுத் தந்தால் அது பயனுள்ளதாக இருக்கும் என அவர் தெரிவித்தார்.

பெண்கள் மனஉறுதியுடனும் திடகரத்திரமாகவும் இருந்தால் தான் அவர்களால் சிறந்த தலைமுறையை உருவாக்க முடியும் என்று குறிப்பிட்ட இரவீந்திரன் அந்த மன உறுதியையும் திடகாத்திரத்தையும் பயிற்சிகள் வழங்குவதாகக் குறிப்பிட்டார். எமது சேவையை வழங்க நாங்கள் தயாராக இருக்கிறோம் எமக்கு சமூக நிறுவனங்கள் ஒத்துழைத்தால் அதனை வரவேற்கிறோம். ஒத்துழைக்காவிட்டாலும் நாம் எமது பயணத்தை தொடர்வோம் என ஆணித்தரமாக பதிலளித்தார் இரவீந்திரன்.

தமிழ் பொது அமைப்புகளுக்கு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் பல மில்லியன் பவுண்களை வழங்குகின்றன. அங்கு பணியில் உள்ளவர்கள் சம்பளம் பெறும் அலுவலர்கள். இரவீந்திரனும் அவரது நண்பர்களும் தமது உழைப்பையே மூலதனமாக்கி ஒரு சிறந்த இளைஞர் சமூகத்தை உருவாக்கும் முயற்சியில் வெற்றிகரமாக ஈடுபட்டு உள்ளனர் எனத் தெரிவித்தார் வி சிவலிங்கம். இந்தப் பொது அமைப்புகளில் உள்ளவர்கள் இவ்வாறான இளைஞர்களின் முயற்சிகளுக்கு பல வழிகளிலும் உதவ வேண்டும். அவர்கள் செய்ய வேண்டியதை அந்த இளைஞர்கள் செய்கிறார்கள் என பெருமையுடன் குறிப்பிட்டார் அக்கல்லூரியில் பயிலும் மாணவர் ஒருவரின் தாயார்.

# ஈழத்து நூல் கண்காட்சி

ஈழத்து நூல் கண்காட்சியின் 5வது நிகழ்வு ஈஸ்ற்காம் ரிறினிற்றி மண்டபத்தில் நவம்பர் 22ல் பிற்பகல் 3 மணி முதல் மாலை இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. உலக அளவில் பரந்து உள்ள ஈழத்து நூல்களை சேகரித்து களஞ்சியப்படுத்தி வரும் முல்லை அமுதன் இக்கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளார். வழமை போல் ஈழத்து, புலம்பெயர் தமிழர்களின் எழுத்து வடிவங்கள் காட்சிக்கு வைக்கப்பட உள்ளன. ஒரு ஸ்தாபனம் மேற்கொள்ள வேண்டிய ஒரு பெரும் பொறுப்பை முல்லை அமுதன் கடந்த பல ஆண்டுகளாக தனிமனிதராக மேற்கொண்டு வருகிறார். ஈழத்து, புலம்பெயர்ந்த தமிழர்களின் நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், சிறப்பிதழ்கள் என ஆயிரக்கணக்கான நூல்களின் களஞ்சியம் இவரிடம் உள்ளது.

## மலேசியத் தமிழ் பள்ளிகளில் அதிபர்கள் இல்லை

மலேசியாவில் உள்ள 40 தமிழ் பள்ளிகளில் அதிபர்கள் இல்லை எனவும் அதனை அடுத்த கல்வி ஆண்டுக்கு முன் தீர்க்கும் படியும் National Union of Teaching Profession NUTP அமைப்பு மலேசிய கல்வி அமைச்சைக் கோரி உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட தற்காலிக ஆசிரியர்கள் செயற்திறன் குன்றியவர்களாக இருப்பதாகவும் அவர்களிடம் கற்பிக்கும் திறம் குறைவாக உள்ளதாகவும் NUTP செயலாளர் டாத்தோ என் சிவ சுப்பிரமணியம் தெரிவிக்கிறார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஆசிரியர்கள் கற்பிப்பதில் மட்டும் கவனம் செலுத்த முடியாத வகையில் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புகள், கருத்தரங்குகள் மற்றும் நிர்வாக செயற்பாடுகளை செய்ய வேண்டி உள்ளதாகவும் தெரிவித்தார்.

இதனைத் தவிர்க்க ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புகள், கருத்தரங்குகள் வார இறுதி நாட்களிலும் விடுமுறைக் காலத்திலும் நடத்தப்படலாம் என தொழிற்சங்கம் கல்வி அமைச்சிற்கு சிபார்சு செய்துள்ளது.

# வெளியீட்டுத் துறையில் அக்கறை

வெளியீட்டுத்துறை பற்றிய கூட்டம் ஒக்ரோபர் 18ல் வோல்தம்ஸ்ரோவில் இடம்பெற்றது. பத்மநாபஐயரின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நூல்வெளியீடுகள் பற்றி பத்திரிகையாளர் மகாலிங்கசிவமும் நூல் செப்பனிடுதல் அல்லது எடிற்றிங் பற்றி இலக்கிய விமர்சகர் யமுனா ராஜேந்திரனும் நூல் வடிவமைப்புப் பற்றி கலைஞர் கிருஷ்ணராஜாவும் நூல் விநியோகம் தொடர்பாக நூலகவியலாளர் என் செல்வராஜாவும் பேசினர்.



விமர்சகர் யமுனா ராஜேந்திரன்

வெளியீட்டுத் துறையில் மணிமேகலைப் பிரசுரம் எழுத்தாளர்களிடம் பணம் பறிக்கும் போக்கில் செயற்படுவதாக மகாலிங்கசிவமும், பத்மநாபஐயரும் குற்றம்சாட்டினர். நூல் செப்பனிடுதல் துறை மேற்கில் வளர்ந்த அளவிற்கு தமிழகத்திலோ, இலங்கையிலோ வளரவில்லை எனக் குறிப்பிட்ட ராஜேந்திரன் தொழில்ரீதியாக இத்துறைகள் வளர்க்கப்படுவது அவசியம் என்று குறிப்பிட்டார். குமுதம் போன்ற ஜனரஞ்சக சஞ்சிகைகளில் ஜெயக்குமார் போன்ற ஓவியர்கள் பெண்களினை கவர்ச்சிக் கோலத்தில் ஓவியமாக்கி பக்கங்களை நிரப்பி மட்டமான ரசனையை ஏற்படுத்துவதாக கிருஷ்ணராஜா குற்றம்சாட்டினார். அவரைக் குறுக்கிட்ட ராஜேந்திரன் தமிழ்நாட்டில் உள்ள சிறந்த ஓவியர்களை கிருஷ்ணராஜா தவறவிட்டதை சுட்டிக்காட்டினார். நூலின் வடிவமைப்பே ஒரு நூலை வாங்கவும் வாசிக்கவும் வாசகனைத் தூண்டும் எனக் குறிப்பிட்டு தனது பேச்சை கிருண்ணராஜா நிறைவு செய்தார். செல்வராஜா பேசும்போது மணிமேகலைப் பிரசுரத்தின் மூலம் வெளியிடும் நூல்கள் தமிழக சந்தைக்கு செல்கின்றது. அதற்கு ஒரு மாற்றுத் திட்டம் இல்லாமல் மணிமேகலைப் பிரசுரத்தின் செயற்பாடுகளை நிறுத்த முடியாது என்று குறிப்பிட்டார். ஒரு சிறந்த விநியோக வலையமைப்பு மிகவும் அவசியமானது என்றும் அதற்கான திட்டமிடல் முக்கியமானது என்றும் செல்வராஜா குறிப்பட்டு தனது பேச்சை நிறைவு செய்தார்.

எழுத்தாளனே நூலை எழுதி, கணணிப்படுத்தி, வடிவமைத்து, பதிப்பித்து, விநியோகிக்கின்ற இன்றைய நிலை மாற்றப்பட வேண்டும் என்பதை அனைத்து பேச்சாளர்களும் வலியுறுத்தினர். அது அண்மைக் காலத்தில் மாறும் நிலை இல்லை என்பதும் உணரப்படுகிறது. ஆனால் அதற்கான ஒரு சிந்தனை மேற்படி சந்திப்பில் தோற்றுவிக்கப்பட்டு உள்ளது.

# ரெயிலை இழுத்து மலேசியாவில் சாதனை

பலசாலி வி ராதாகிருஷ்ணன் 260,800 கிலோகிராம் எடையுள்ள ரெயில் வண்டியை கயிற்றில் கட்டி இழுத்து சாதனை படைத்துள்ளார். ஒக்ரோபர் 18 கோலாலம்பூரில் இச் சாதனை நிலைநாட்டப்பட்டது. இதில் புருனை சுல்தானும் கலந்துகொண்டார். 1960ல் பெல்ஜியம் நாட்டவர் 200,800 கிலோகிராம் எடையுள்ள ரெயிலை இழுத்து செய்த சாதனையை ராதாகிருஷ்ணன் 60,000 கிலோகிராம் வித்தியாசத்தில் 43 ஆண்டுகளின் பின் முறியடித்து உள்ளார்.

மகதீர் மலேசிய உணர்வை ஏற்படுத்திய தலைவர் எனக் குறிப்பிட்ட ராதாகிருஷ்ணன், இயலாது முடியாது என்ற வார்த்தைகளை மலேசியர்கள் சொல்லக் கூடாது எனக் கூறினார். பிரதமர் மகதீரிடம் இருந்து ராதாகிருஷ்ணன் சான்றிதழைப் பெற்றுக் கொண்டார்.

சாதனைகளை முறியடிக்க அல்லது 5 உலக சாதனைகளை நிலைநாட்டப் போவதாக அந்தப் பலமான வீரர் உறுதி அளித்தார். தனது அநேகமாக அடுத்த சாதனையாக பறக்கும் கெலிகொப்ரரை பற்களால் இழுக்கப்போவதாகக் கூறி உள்ளார்.

# தபாலகங்களில் ஓய்வூதிய மோசடி

## தமிழர்களால் நடத்தப்படும் தபாலகங்களிலும் விசாரணை

தபாலகங்களில் நடைபெற்ற ஓய்வூதிய மோசடி பற்றிய விசாரணைகள் செப்ரம்பரில் ஆரம்பிக்கப்பட்டு உள்ளது. இலண்டனின் வெவ்வேறு தபாலகங்களில் ஓய்வூதியப் புத்தகங்களில் மோசடிகள் செய்யப்பட்டதாக தெரியவருகிறது. இது தொடர்பாக விசாரணைக்கு உட்பட்டு உள்ளவர்களில் சில தமிழ் தபாலகத்தினரும் அடங்கி உள்ளனர்.



தபாலக உரிமையாளர் ரமணன்

இது தொடர்பாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட எட்மன்டன் தபாலக உரிமையாளர் ராமேஸ்வரா (ரமணன்) என்பவரைத் தொடர்பு கொண்ட போது ஓய்வூதிய மோசடி பற்றி விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் டிசம்பர் முடிவில் தான் விசாரணை முடிவுகள் தெரியவரும் என்றும் தெரிவித்தார். 30 தபாலகங்கள் வரை விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு உள்ளதாகவும் அதில் 12 தபாலகங்கள் தமிழர்களுடையது என்றும் அவர் தெரிவித்தார்.

கிளேகோவில் வாழும் ராமேஸ்வரா, தான் நாட்டில் இல்லாத சமயம் இவை நடந்ததாகக் குறிப்பிட்டார். இக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக அவர்களிடம் எந்த ஆதாரமும் இருப்பதாகத் தெரியவில்லை என்றும் வழமை போல் தபாலகங்கள் இயங்குவதாகவும் அவர் கூறினார். ராமேஸ்வரா வோல்தம்ஸ்ரோ கற்பக விநாயகர் ஆலயத்தின் காசாளராகவும் ரெட்பிறிஜ் தமிழச் சங்கத்தின் தலைவராகவும் உள்ளார்.

# வானலையில் மரதன் நிகழ்த்துகிறார் சிவாந்தி

ஐரோப்பியத் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் (ETBC) உலக சாதனை ஒன்றுக்குத் தயாராகின்றார் சிவாந்தி சிவசுப்பிரமணியம். தொடர்ந்து 122 மணித்தியாலங்கள் நேரடி ஒலிபரப்பில் உரையாடி உலக சாதனையை நிலைநாட்ட இவர் திட்டமிட்டு உள்ளார். ஒக்ரோபர் நடுப் பகுதிவரை அதற்கான பயிற்சியை மேற்கொண்ட சிவாந்தி தொடர்ந்து 4 நாட்கள் நித்திரையின்றி உரையாடல் செய்துள்ளார்.

ஒக்ரோபர் மாதம் 25 காலை 10 மணிக்கு சாதனைக்கான போட்டியில் சிவாந்தி குதிக்க உள்ளார். அவரது 122 மணிநேர மரதன் உரையாடல் நேரடி ஒலிபரப்பு ஒக்ரோபர் 30ம் திகதி மதியம் 12 மணிக்கு முடிவடையும். போட்டி விதிகளின் படி அவர் ஒவ்வொரு 8 மணிநேரத்திற்கும் 15 நிமிடங்களே ஓய்வெடுக்க அனுமதிக்கப்படுவார். 5 நாட்கள் தொடர்ச்சியாக நித்திரையின்றி தனது சாதனையை நிலைநாட்ட அவர் தயார் நிலையில் உள்ளார்.

தமிழ்த் தொலைக்காட்சி கொட்பேட் இணைப்பை வைத்திருப்பவர்கள் ETBC வானொலி நேரடி நிகழ்ச்சியில் தொலைபேசி மூலம் இணைந்து சிவாந்தியை உற்சாகப்படுத்தி அவரது சாதனைக்கு உதவ முடியும். குறிப்பாக போட்டியின் இறுதி நாட்களில் இரவு வேளையில் அவர் சோர்வடையாமல் இருக்க உங்கள் அழைப்பு மிகவும் உதவி செய்யும். சிவாந்தியின் முயற்சிக்கு உங்கள் சாபாஷ் பயனுள்ளதாக இருக்கும்.

103.5 மணிநேரம் தொடர்ந்து டி ஜெ செய்து சுவீடிஸ்காரர் 2001ல் நிலைநிறுத்திய சாதனைக்கு கனடாவில் உள்ள கீதவாணி வானொலியூடாக யூனில் சுரேஸ் ஜோச்சிம் 120 மணிநேரம் டி ஜெ செய்து சவால் விட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இலண்டன் ரவர் பிறிஜ் அருகில் கண்ணாடிப் பெட்டியில் 45 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து (நீர் மட்டும் அருந்தி) டேவிட் பிளெயின் என்ற அமெரிக்க வித்தைக்காரர் சாதனை நிலைநாட்டி உள்ளது குறிப்பிடத்தக்கது.

The UDHAYAN
உதயன்
UK's No.1 National Tamil Newspaper
ADVERTISE FOR BEST RESULTS
020 8952 5677

YAASHIK Motors
* MOT - Diesel & Petrol
* Performance Tuning & Parts
* Mail Order
* Seat, Audi Specialist
* Servicing, Clutches, etc.
Tel: 020 8998 8900
Unit 5A, 255 Water Road, Wembley, Middx. HA0 1JW

J.RAJA & Co.
Chartered Certified Accountants and Registered Auditors
Tel: 020 8597 5590
Fax: 020 8590 5200
We provide
Auditing, Accounting and Taxation Services for Businesses and Self-Employed Individuals
962, Eastern Avenue, Newbury Park, Ilford, Essex IG2 7JD
Email: jraja@jraja.co.uk

JK SHAH
Chartered Certified Accountants & Registered Auditors
e-mail: jk@jkshah.com
website: www.jkshah.com
570 Romford Road, Manor Park London E12 5AF
TEL: 020 8553 2436
FAX: 020 8514 6939

K.M.S. Accountants
For FREE Consultation on Self Assessment Returns, CIS25 refunds, Financial Accounts for Limited Companies/ Sole Traders, Company Formation, VAT, PAYE & Book-keeping Services
Tel: 020 8503 3375
Email: kms_group@hotmail.com

BHANOT & CO.
Chartered Accountants
A COMPLETE RANGE OF SERVICES AT REASONABLE RATES
TAX
AUDIT
FINANCE
PENSIONS
MORTGAGES
BOOK-KEEPING
CASH-FLOWS
ACCOUNTS
PAYROLL
PLANS
VAT
020 8840 8844
Email: anil@bhanot.co.uk

SMART MORTGAGE GROUP
We specialise in **Mortgages** for the Self-Employed and Company Directors.
We need a minimum of 10% Deposit and No proof of income.
Call on 08000 811911
460 Uxbridge Road, Hayes, Middx. UB4 0SD
www.smartmortgagegroup.co.uk

MORTGAGE PLUS (London) LTD
Mortgages Tailor-made for You
* Specialist in CCJ/Default Cases
Tel:
020 8571 2570
07710 150713
81, South Road, Southall, Middx.
Your home is at risk if you fail to keep up repayments on loans secured on it.

# உலகமயமாக்கல் வளர்முகநாடுகளுக்கு வில்லங்கமாகிறது

உலக வர்த்தக மையத்தின் செயற்பாடுகள் செல்வந்த நாடுகளுக்கு சாதகமாகவும் வறிய நாடுகளை தொடர்ந்தும் வறுமையில் வைத்திருப்பதாகவும் சமூக சுற்றுச் சுழல் அமைப்புகள் தெரிவிக்கின்றன.

சுகாதாரத்தை எடுத்துக் கொண்டால் மருந்துகளின் விலையை உலக வர்த்தக அமைப்பு உயர்வாகவே தொடர்ந்தும் வைத்து உள்ளது. இதனால் உலக சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் மருந்துகளை வாங்க முடியாத நிலையில் உள்ளனர் என ஒக்ஸ்பாம் அமைப்புத் தெரிவிக்கிறது. செல்வந்த நாடுகளில் உள்ளவர்கள் அனுபவிக்கும் வாங்கும் சக்தி வறியநாடுகளுக்கு இல்லை என்றும் அதனால் குணப்படுத்தக்கூடிய கட்டுப்படுத்தக் கூடிய நோய்களினால் மக்கள் மரணத்தை எதிர்நோக்குவதாகவும் அவ்வமைப்பு குற்றம்சாட்டுகிறது. அமெரிக்காவும் சில மருந்து உற்பத்தி நிறுவனங்களும் விலையை உயர்வாக வைத்திருப்பதாக ஒக்ஸ்பாம் குற்றம்சாட்டுகிறது.

விவசாயத்தை எடுத்துக் கொண்டால் 97 வீதமான விவசாயிகள் வளர்முக நாடுகளில் வாழ்கிறார்கள். ஆனால் மேற்கு நாடுகளில் உள்ள விவசாயிகளுக்கு அந்நாட்டு அரசாங்கங்கள் அதிக அளவு உதவிகளை வழங்குகின்றது. ஆனால் வளர்முக நாடுகளில் அரசாங்கங்கள் அவ்வகை உதவிகளை தமது விவசாயிகளுக்கு வழங்க முடியாத நிலையில் உள்ளனர். இதன் காரணமாக வளர்முக நாட்டு விவசாயிகள் தங்கள் மேற்கு நாட்டு போட்டியாளர்களுடன் போட்டியிட முடியாத நிலை உள்ளது.

ஆகவே உள்ளூர் சந்தையை தக்க வைக்க வளர்முகநாடுகள் இறக்குமதி வரிகளை விதிக்கிறார்கள். ஆனால் இறக்குமதி வரிகளை குறைத்துக் கொள்ள அழுத்தம் கொடுக்கும் உலக வர்த்தக அமைப்பு மேற்கு நாட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படும் உதவித்தொகையை கட்டுப்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என வெளிநாட்டு அபிவிருத்திக்கான கத்தோலிக்க வர்த்தக முகவர் அமைப்பு தெரிவிக்கிறது.

வெளிநாட்டு முதலீடுகளுக்கு அதிக அதிகாரங்களைப் பெறும் வகையில் உலக வர்த்தக மையம் விரிவுபடுத்தப்பட வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் கருதுகிறது. இதன் மூலம் மூலதனத்தை வழங்கிவிட்டு சர்ச்சைக்குரிய விதிமுறைகளை அந்நாடுகளில் திணிக்க முற்படுவதாக அக்சன் எய்ட் அமைப்பு தெரிவிக்கிறது. அங்கு நுழையும் பல்தேசியக் கம்பனிகளை உள்ளூர் மூலவளங்களைப் பயன்படுத்த நிர்ப்பந்திக்க முடிவதில்லை. உள்ளூர் மனிதவளத்தை பயன்படுத்த முடிவதில்லை. 100க்கும் மேற்பட்ட வளர்முக நாடுகள் இவ்வகையான முதலீட்டு ஒப்பந்தங்களில் கையெழுத்திட மறுத்து வருகின்றனர். அக்சன் எய்ட் அமைப்பு இவ்வாறான ஒப்பந்தங்களுக்கு எதிராக குரல்கொடுத்து வருகிறது.

மேலும் உலக வர்த்தக அமைப்பில் முடிவெடுக்கும் முறையில் ஜனநாயகமின்மை காணப்படுகிறது என உலக அபிவிருத்தி இயக்கம் தெரிவிக்கிறது. செல்வந்த நாடுகள் வறிய நாடுகளுக்கு அழுத்தங்களை வழங்குவதும் மறைமுகமான மிரட்டல்களை விடுவதும் அங்கு காணப்படுவதாக அவ்வமைப்பு குற்றம்சாட்டுகிறது. அரசியலும் இதில் செல்வாக்கு செலுத்துகிறது.

# Cash Machine பயன்படுத்தும் போது அவதானம்

Cash Machine பயன்படுத்தும் போது அவதானமாக இருக்குமாறு பொலிஸார் பாவனையாளர்களைக் கேட்டுக் கொண்டுள்ளனர். வங்கி மட்டையை செலுத்தும் வழியினூடாக மெல்லிய பிளாஸ்ரிக் அல்லது உலோக உறையை கண்ணுக்குத் தெரியாமல் செலுத்தி உங்கள் வங்கி அட்டையை களவாடும் முயற்சிகள் இடம் பெறுவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். மெல்லிய உறை செலுத்தப்பட்டு இருந்தால் நீங்கள் வங்கி அட்டையை செலுத்தி உங்கள் இரகசிய இலக்கத்தை அழுத்தினாலும் அந்த இயந்திரத்தினால் அதனை வாசிக்க முடியாது. அது தொடர்ந்தும் உங்கள் இரகசிய இலக்கத்தை அழுத்தும் படி கேட்கும். இச்சமயத்தில் நீங்கள் இலக்கத்தை அழுத்துவது இரகசியமாகப் பதிவு செய்யப்பட்டுக் கொண்டிருக்கும்.

ஒரு கட்டத்தில் இயந்திரம் உங்கள் அட்டையை உள்வாங்கி விட்டது என்று எண்ணி நீங்கள் சென்றவுடன் இந்தக் களவாளிகள் உங்கள் வங்கி அட்டையை எடுத்து பதிவுசெய்யப்பட்ட ரக்கோடரின் மூலம் இரகசிய இலக்கத்தையும் பெற்று உங்கள் வங்கிக் கணக்கை துடைத்து எடுத்து விடுவார்கள். மேலும் காட் இழுக்கும் இடங்களில் கொடுத்து பொருட்களை கொள்வனவு செய்வார்கள். இல்லையானால் அதனை பிரதி செய்து மோசடியில் ஈடுபடுவார்கள் என காவல்துறை எச்சரிக்கிறது.

# தன் சிறுநீரை தானே அருந்தி

## 45 நாள் உண்ணாவிரதம் - சுவாமி ஆனந் சவால்



சவால் : சுவாமி ஆனந்

அமெரிக்க வித்தகர் டேவிட் பிளெய்னின் 45 நாள் உண்ணாவிரதத்திற்கு சுவாமி பிந்தி ஆனந் (32) சவால் விட்டு உள்ளார். ஈலிங்கைச் சேர்ந்த இவர் தனது சவாலில் கிடைக்கும் பணத்தை தர்ம ஸ்தாபனங்களுக்கு வழங்கப் போவதாகவும் கூறி உள்ளார். டேவிட் பிளெயினுக்கு இந்த சதானையால் ஆறு மில்லியன் பவுண் பெறுமதியான தொலைக்காட்சி ஒப்பந்தங்களும் விளம்பரங்களும் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. டேவிட் பிளேயின் உண்ணாவிரதம் இருந்த இடத்திற்கு அருகிலேயே தான் உண்ணாவிரதம் இருக்க சுவாமி ஆனந் திட்டமிட்டிருந்தார்.

டேவிட் பிளெயின் தண்ணீருடாக சத்துக்களை பெற்றிருக்க முடியும் என சந்தேகம் எழுப்பி உள்ள சுவாமி ஆனந், தான தனது சிறுநீரை மட்டுமே அருந்தி உண்ணாவிரதத்தை மேற்கொள்ள உள்ளார். யோகாப் பயிற்சிகள் மூலம் உடற்செயற்பாடுகளை கட்டுப்படுத்தி பெரும்பாலான நேரம் தாமரையில் இருப்பது போல் இருந்து தியானம் செய்ய உள்ளதாகவும் அவர் தெரிவித்து உள்ளார். இவர் இதற்கு முன் 21 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அதிகரிக்கும் விவாகரத்துக்கள்

விவாகரத்துக்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டு 150,000 ஆக அதிகரித்து உள்ளது. அதற்கு முந்தைய ஆண்டைக் காட்டிலும் சென்ற ஆண்டு விவாகரத்துக்கள் 4,000 ஆல் அதிகமாகி உள்ளது. இந்த விவாகரத்துக்களால் 150,000 குழந்தைகள் முறிந்த உறவுகளுக்குள் வாழ்கிறார்கள். இவர்களில் 25 வீதமானவர்கள் 5 வயதுக்கு உட்பட்டவர்கள். இவ்விபரங்களை தேசிய புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டு உள்ளது.

விவாகரத்து ஏற்பட்ட குடும்பங்களில் வறுமையும் நோயும் அதிகமுள்ளதாக ஆய்வுகள் காட்டுகின்றது. குறிப்பாக விவாகரத்தான குடும்பங்களில் உள்ள குழந்தைகள் வறுமைக்கு செல்வதாகவும் பள்ளியில் அவர்களால் வெற்றி அடைய முடிவதில்லை என்றும் அதிக உடல்நலப் பாதிப்பிற்கு உள்ளாவதாகவும் அவ்வாய்வுகள் தெரிவிக்கின்றன. மேலும் அவர்கள் எதிர்காலத்தில் வேலையிலும் குடும்ப உறவிலும் பிரச்சினைகளை எதிர்நோக்குவதாகவும் அவ்வாய்வு தெரிவிக்கிறது.

அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் குடும்ப கட்டமைப்பிற்கு ஒவ்வாத செயற்பாடுகள் விவாகரத்தை அதிகரிப்பதாகக் குற்றம்சாட்டப்படுகிறது. மணமான தம்பதிகளுக்கு இருந்த வரி விலக்குகள் நீக்கப்பட்டமை, மணமான தம்பதிகளுக்கான கொடுப்பனவுகள் இல்லாமல் செய்யப்பட்டு தனிப் பெற்றோரிற்கான கொடுப்பனவுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டமை, குடும்பத்தில் ஒருவர் வீட்டில் இருந்து பிள்ளைகளைப் பார்க்கும் முறைக்கு எதிராக பாரபட்சம் காட்டியமை ஆகியன விவாகரத்து அதிகரிப்பிற்கு காரணமாகக் கூறப்படுகிறது.

1000 திருமணங்களுக்கு 13.3 விவாகரத்துக்கள் இடம்பெறுகின்றதாம். மேலும் திருமணங்களின் எண்ணிக்கையும் வெகுவாக வீழ்ச்சி அடைந்து உள்ளதாம். விவாகரத்துக்களின் எண்ணிக்கை தமிழர்கள் மத்தியிலும் அதிகரித்து வருகின்றது. ஆனால் அதற்கான காரணங்கள் சற்று மாறுபட்டவையாக குறிப்பாக உணர்ச்சிகள் சம்பந்தப்பட்டதாகக் காணப்படுகிறது. எதிர்பார்ப்புகள், ஏமாற்றங்கள், நம்பிக்கையீனங்கள், உறவுகளின் தலையீடுகள், மன உளைச்சல்கள் இதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

# உள்ளூர் பள்ளிகள்

தனது மாணவர்களை அருகில் உள்ள 2ம் நிலைப் பள்ளிகளுக்கு அனுப்புவதைக் காட்டிலும் தான் பிச்சை எடுக்கலாம் என கொன்சவேடிவ் கட்சி பா உ ஒலிவர் லெட்வின் தெரிவித்து உள்ளார். நிழல் உள்துறை அமைச்சரான இவர் தனது இரு பிள்ளைகளையும் வீட்டிற்கு அருகில் உள்ள பாடசாலைக்கு அனுப்புவதிலும் பார்க்க தெருவில் பிச்சை எடுத்தாவது தனியார் பாடசாலைக்கு அனுப்பியே படிப்பிக்கப் போவதாகக் கூறி உள்ளார். இவர் தெற்கு இலண்டனில் உள்ள Lilian Baylis பள்ளியை வைத்தே தன் கருத்தை வெளியிட்டு உள்ளார். கடந்த ஆண்டு இப்பள்ளியில் ஆறு வீதமானவர்களே GCSEல் 5 பாடங்களில் நல்ல பெறுபேறுகளைப் பெற்றனர். இவ்வாண்டு இத்தொகை 17 வீதமாக உயர்ந்து உள்ளது.

# பிரித்தானியர் ஆவதற்கான தகுதி

பிரித்தானியப் பிரஜைகளாவதற்கான பரீட்சைகள் பற்றி உள்துறை அமைச்சு அறிவித்து உள்ளது. பிரித்தானியாவில் வாழும் குடிவரவாளர்கள் பிரித்தானிய பிரஜைகளாக விரும்பினால் இரு பரீட்சைகளுக்கு கட்டாயமாகத் தோற்ற வேண்டும். ஒன்று ஆங்கில அறிவு சம்பந்தப்பட்டது. மற்றையது பிரித்தானியக் கலாச்சாரம் பற்றியது. இதில் சித்தி அடையத் தவறுபவர்கள் பிரித்தானியக் கடவுச் சீட்டையோ வாக்குரிமையையோ பெற முடியாது. ஆனால் அவர்களது வதிவிட உரிமை இதனால் பாதிக்கப்படாது.

பிரித்தானிய பாராளுமன்ற ஜனநாயகம், தேர்தல் முறை, சமூக அமைப்புகளில் ஈடுபாடு போன்ற பிரித்தானிய தேசிய அமைப்புகள் பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட உள்ளது. பிரித்தானியாவின் பல்லினத் தன்மை - ஐக்கிய ராச்சியத்தின் கூறுகள், நான்கு வரலாற்றுத் தேசியங்கள், நாளாந்த நடைமுறையிலும் சட்டத்திலும் பெண்களின் நிலையும் அதில் ஏற்படும் மாற்றங்களும்; பிரித்தானியாவின் அடிப்படைச் சட்டவிதிகள் - ஒரு பிரஜையின் உரிமையும் கடமைகளும், மஜிஸ்திரேட், கிரவுன் நீதிமன்றங்கள்; வேலைவாய்ப்பு - எப்படி வேலை தேடுவது, National Insurance NI முறைமை, சிறு வர்த்தக வாய்ப்புகளை எப்படி அணுகுவது என்பனவும் பரீட்சிக்கப்பட இருக்கிறது.

பிரஜைகள் ஆலோசனை மையங்கள், நூலகங்கள், உள்ளூர் தேசிய பத்திரிகைகள் போன்ற உதவி, தகவல் எடுக்கும் வழிமுறைகள்; வீடுகள் பற்றிய அறிவு, எப்படி நல்ல அயலவர்களாக இருப்பது, எப்படி கட்டணங்களைச் செலுத்துவது போன்ற நாளாந்த செயற்பாடுகளுக்கான அறிவும் பரீட்சிக்கப்பட இருக்கிறது.

பிரித்தானியாவில் வாழ்க்கை - ஆலோசனைக் குழு இந்த பரீட்சிக்கப்பட வேண்டிய விடயங்களை சிபார்சு செய்துள்ளது. சிவில் உரிமைகளுக்கான அமைப்பு இதனை வரவேற்று உள்ளது. இப்பரீட்சைகள் பாரபட்சமானவையாகலாம் என Joint Council for the Welfare of Immigrants எச்சரித்து உள்ளது.

# மோசமான வீதிகள்

எம் 25 சந்திப்பு 5 முதல் 21 வரையான வீதி பிரித்தானியாவிலேயே மோசமான வீதியாக அண்மைய ஆய்வில் குறிப்பிடப்பட்டு உள்ளது. இரண்டாவது மோசமான வீதியாக ஏ303ம் மூன்றாவதாக எம்1 விதியும் குறிப்பிடப்பட்டு உள்ளது.

ஐல்ஸ் ஒப் ஸ்கை பகுதியில் உள்ள ஏ87 வீதி போக்குவரத்து நெரிசல் அற்ற முதல் தர வீதியாக கணிக்கப்பட்டு உள்ளது.

# தபாலகங்களில் பணம் எடுக்கலாம்

அருகில் வங்கிகள், பணம் எடுப்பதற்கான இயந்திரம் (Cash Machine) இல்லாதவர்கள் தங்கள் காட்டைப் பயன்படுத்தி தபாலகங்களில் பணத்தைப் பெறலாம். தபாலகங்களில் பெரும்பாலான வங்கிகளின் காட்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. அத்துடன் பணத்தை 10ன் மடங்காக எடுக்க வேண்டும் என்ற அவசியமும் இல்லை. மேலும் டெபிட்காட்டைப் பயன்படுத்தி பெரும்பாலான நாளாந்த கட்டணங்களை தபாலகங்களில் செலுத்த முடியும்.

For News & Advertising: 020 8952 5677 For Distributions : 020 8905 7775

## கமராக்களும் விபத்துக்களும்

வேகக் கட்டுப்பாட்டுக் கமராக்களால் வீதி விபத்துக்கள் குறைந்திருப்பதாக பொலிஸார் தெரிவித்து உள்ளனர். இக்கமராக்களால் உயிரிழப்புகள் 13 வீதம் வரை குறைந்து உள்ளதாக அத்தகவல் தெரிவிக்கிறது. கடந்த ஆண்டு லீட்ஸ் பல்கலைக் கழகத்தில் நடத்தப்பட்ட ஆய்வில் வேகத்தடைக் கமராக்கள் விபத்துக்களை அதிகரிப்பதாக குறிப்பிடப்பட்டது.

We are a specialist Criminal Firm
24 Hour
POLICE STATION EMERGENCY SERVICE
JUNG & CO
SOLICITORS
41 NORTH ROAD, SOUTHALL, MIDDX. UB1 2JL
TEL: 020 8813 8996 Fax: 020 8813 8559
EMERGENCY Nos. 07956 279 170
07956 867 370
We can also assist with:
Family - Wills & Probate - Conveyancing

SRIHARANS SOLICITORS
AUTHORISED TO ADMINISTER OATH
Professional service for freedom and justice under the Human Rights Act of UK and with European Convention of Human Rights
(P) 020 8843 9977
020 8843 9974 (3 lines)
223 The Broadway
Southall, Middx.

IN TROUBLE WITH THE POLICE
24 Hr. POLICE STATION ATTENDANCE
FREE INITIAL INTERVIEW
ANY CASE CONSIDERED
Mehra & Co.
—Solicitors—
367 High Road Wembley
Criminal Defence Service
020 8902 1900
Mobile 07956 528 927
07956 463 665

## பிரித்தானிய எதிர்க் கட்சித் தலைமை ஊசலாடுகிறது

பிரித்தானியாவின் எதிர்க்கட்சியான கொன்சவேடிவ்களின் தலைமை ஊசலாடுகிறது. அதன் தற்போதைய தலைவர் இயன் டங்கன் சிமித்தை கவிழ்ப்பதில் அக்கட்சியில் சிலர் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றனர். அண்மையில் பிளக்பூலில் நடந்த கட்சி மாநாட்டு உரையால் ஓரளவு தன்னை தக்க வைத்துக் கொண்ட டங்கன் சிமித் தனது மனைவி பெஸ்றிக்கு £17,000 சம்பளம் கொண்ட செயலாளர் வேலையை விதிமுறைகளைப் பின்பற்றாமல் வழங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டார். கட்சிக்குள் உள்ள அவரது எதிரிகள் இதனைப் பாவித்து அவரை தூக்கி எறிய முனைப்புடன் செயற்பட்டு வருகின்றனர். இந்த எதிரணியில் கட்சியின் முக்கிய உறுப்பினர்களும் கட்சிக்கு நிதி வழங்குபவர்களும் அணிவகுத்து உள்ளனர்.

தொழிற்கட்சி டொக்டர் கெலி, ஈராக் மீதான தாக்குதல், பல்கலைக்கழகக் கட்டணம் என்பனவற்றால் மிகவும் பாதிக்கப்பட்டு இருந்தாலும் கொன்சவேடிவ் கட்சியால் அதனை தங்கள் வெற்றியாக்கிக் கொள்ள முடியவில்லை என கட்சிக்குள் தெரிவிக்கப்படுகிறது. அடுத்த தேர்தலிலும் தொழிற்கட்சி வெற்றி பெறுவது உறுதியாகி வருகிறது. ஆனால் கொன்சவேடிவினர் எதிர்க் கட்சியாகக் கூட வரமுடியுமா என்ற சந்தேகம் தற்போது உருவாகி உள்ளது. பிறன்ற் ஈஸ்றி தொகுதியில் வெற்றி பெற்ற லிபிரல் டெமொகிரட் கட்சி கொன்சவேடிவ்களை மூன்றாம் நிலைக்குத் தள்ளப்போவதாக சவால் விட்டு உள்ளது. தொழிற்கட்சியும் லிபிரல் டெமொகிரட் கட்சியும் தேர்தல் பிரச்சாரத்தில் ஒருவரை ஒருவர் தாக்குவதில்லை என இரகசிய உடன்பாடு செய்துள்ளதாகவும் இருகட்சிகளும் சேர்ந்து கொன்சவேடிவ் கட்சியை ஓரம்கட்ட திட்டமிட்டு உள்ளதாகவும் ஓர் பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது.

## வீட்டு விலைகள் அதிகரிக்கப்படலாம்

வீட்டுக் கடன்களின் வட்டிவீதம் அடுத்த ஆண்டு இறுதிக்குள் 1.5 வீதத்தால் அதிகரிக்கப்படலாம் என ஒக்ரோபர் 22 அன்று நிபுணர்கள் எதிர்வு கூறி உள்ளனர். இதன் படி தற்போது 3.5 வீதமாக உள்ள வீட்டுக்கடன் வட்டி அடுத்த ஆண்டு இறுதிக்குள் 5.0 வீதமாக அதிகரிக்கப்படலாம். இதன்படி £150 பெறுமதியான வீட்டுக்கடன் (றிபேய்மன்ற்) உடையவர்கள் மாதம் £135 அதிகம் செலுத்த வேண்டி இருக்கும். அவர்கள் மாதாந்தம் மீளச் செலுத்த வேண்டிய தொகை £1000 ஆக அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது.

### முத்திரை வரியை அதிகரிக்கலாம்

வீடு வாங்கும் போது செலுத்த வேண்டிய முத்திரை வரியை, நிதி அமைச்சுச் செயலாளர் கோடன் பிறவுன் அதிகரிக்கலாம் என நகர வங்கி ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். நிதி அமைச்சரின் வரவுசெலவுத் திட்டத்தில் ஏற்பட்டுள்ள £10 பில்லியன் ஓட்டையை இந்த முத்திரை வரி அதிகரிப்பின் மூலம் அவர் நிரப்ப முயற்சிக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஏற்கனவே தொழிற்கட்சி ஆட்சிக்கு வந்த பின்னர் முத்திரை வரி அதிகரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

£60,000 உள் முத்திரை வரிக்கு விலக்கு அளிக்கப்பட்டு உள்ளது. இந்த மட்டத்தை அதிகரிக்க தொழிற்கட்சி தயாராக இல்லை. சராசரி வீட்டின் விலை மிகவும் அதிகரித்து உள்ள நிலையிலும் வரிவிலக்கு மட்டம் அதே அளவில் வைக்கப்பட்டு உள்ளதால் முதற் தடவை வீடு வாங்குபவர்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர்.

### தற்போதுள்ள முத்திரை வரி:

£60,000 - £250,000 - முத்திரை வரி 1.0 வீதம்
£250,000 - £300,000 - முத்திரை வரி 2.5 வீதம்
£300,000 - £500,000 - முத்திரை வரி 3.0 வீதம்
£500,000 - மேல் - முத்திரை வரி 4.0 வீதம்

## பொலிசார் வேலையில் இருந்து நீங்கினர்

பிபிசி 1ல் 21 ஒக்ரோபரில் காண்பிக்கப்பட்ட த ஸ்ரீற் பொலிஸ்மன் நிகழ்ச்சியில் இனவாதத்தைக் கக்கிய பொலிஸார் ஐவர் வேலையில் இருந்து வெளியேறி உள்ளனர். பிபிசி புலனாய்வு நிருபர் மார்க் டெலி பொலிஸிற்கு விண்ணப்பித்து பொலிஸில் சேர்ந்து நடத்திய புலனாய்வில் மேற்படி 5 பொலிஸாரும் இன்னும் மூவரும் இனவாதத்தைக் கக்கியது இரகசியமாக பதிவு செய்யப்பட்டது. இந்தப் புலன்விசாரணையின் இடையில் மார்க் டெலி ஒரு நிருபர் என்பது கண்டுபிடிக்கப்பட்டு அவர் மீது பொலிசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். ஏனைய மூவருக்கு எதிராகவும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு உள்ளனர்.

## வயக்கிரா புரளி

பெற்றோர் பாலியல் கிளர்ச்சிக்காகப் பயன்படுத்திய வயக்கிரா மாத்திரைகளை பாடசாலைக்கு எடுத்துச் சென்று 12 வயது நிரம்பிய தனது 6 நண்பர்களுக்கு வழங்கி உள்ளான் ஒரு சிறுவன். இச்சம்பவம் பேர்ச்செயரில் இடம்பெற்று உள்ளது. இன்னொரு மாணவனின் ஆசிரியர்களுக்கு தகவல் கொடுக்கவே அந்த மாணவர்கள் அனைவரும் உடனடியாக மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் எந்தப் பாதிப்பும் இன்றி நலமாகவே உள்ளனர்.

ஏனைய மாணவர்களை ஆபத்திற்கு உள்ளாக்கியதற்காக மாத்திரைகளை விநியோகித்த மாணவன் தற்காலிகமாக பாடசாலையில் இருந்து நிறுத்தப்பட்டு உள்ளார். தாங்கள் எதற்காக அந்த மாத்திரைகளைப் பயன்படுத்துகிறோம் என பிள்ளைக்குத் தெரியாது என அப்பெற்றோர் தெரிவிக்கின்றனர். சிறுவர்களில் இம்மாத்திரை செயற்படாது என மருத்துவமனைப் பேச்சாளர் தெரிவித்தார்.

WARAN & COMPANY
SOLICITORS
Commissioners of Oath
Specialists in:
* Immigration & Nationality
* Asylum & Refugee matters
* Housing
* Conveyancing (Residential & Commercial)
* Liquor Licencing
Call Mr. S. K. Nageswaran LLB
Mrs. P. Nageswaran LLB (Hons.), LLB (Lon)
on
Tel: 020 8808 2397
583 High Road, Tottenham, London N17 9SY Fax: 020 8801 8818

Genga & Co.
Solicitors
Administor of Oaths
Legal Aid Francise for Crime and Immigration
Specialists in:
Asylum + Immigration Law
Criminal Law-
Police station
Magitrate court
Crown court
தேர்ச்சி பெற்ற சட்ட வல்லுனர்கள்:
"அகதி அந்தஸ்து குடிவரவு குடியகல்வு
குற்றவியல் வழக்குகள்"
"மஜிஸ்டிரேட் நீதிமன்றம்,
பொலிஸ்நிலையம்"
எந்தவிதமான அவசரத் தேவைக்கும்
24 மணித்தியால தொடர்பு இலக்கம்
07956 569 559
Tel: 020 8795 5020
Fax: 020 8795 5030
Genga & Co.
1st & 2nd Floor
588 High Road Wembley,
Middx. HA0 2AF


Graphical Impact
Signs~Designs~Graphics
61 Hoe Street, Walthamstow, London E17 4SA
Tel 020 8925 2333 Fax 020 8925 2332
www.graphicalimpact.com

உங்களின் வரி விளம்பரங்களுக்கு
உதயன் 020 8952 5677

Thompson & Co.
Solicitors
Legal Aid for
* Immigration
* Employment
* Criminal Law
* Also Property & Family Law
Tel: 020 8767 5005
48A Tooting High Street
(Opposite Broadway Station)
London SW17 0RG
Email: mail@thompsonlaw.co.uk


New Century Glazing Ltd.
...the ULTIMATE NEWBUILD or Complete refurbishment -
Eurocell's maintainence free PVCu WINDOWS and DOORS, FULLY WELDED and INTERNALLY BEADED...
Member of FENSA
Free Estimates
Tel: 020 8848 0189
Unit 5, Halls Business Centre, Pump Lane, Hayes, Middx.

Thana & Dev
Solicitors & Administrators of Oaths
முன்னாள் THANA & CO தற்போது Thana & Dev சட்ட நிறுவனம் ஆக புதிய முகவரியில் இயங்குகின்றது.
* Immigration/Work Permit
* House/Shops Buy/Sale/Let
Call us
020 8521 4686
07976 660 635 (24 hrs)
10 Hoe Street, Walthamstow, London E17 4PH

EMPLOYMENT CLAIMS
NO WIN NO FEE
We act for Employers and Employees
on NO WIN NO FEE basis the following matters
Unfair Dismissal, Racial Discrimination, Sexual Discrimination, Denial of Promotion, Underpayment, Denial of Holiday pay/sick pay/ maternity leave/minimum pay and related issues
Contact Mr. Das on 0790323597/07958618106
MARKANDAN & Co.
Thamil House, 720 Romford Road, Manor Park, London E12 6BT
Tel: 020 8514 8188 Fax: 020 8514 8303
email: mm@markandan-solicitors.co.uk

# செய்திச் சுருக்கம்

## தஞ்சம்

தஞ்ச எண்ணிக்கை பிரித்தானியாவில் குறைந்ததற்கு தஞ்சம் கோருவோர் தலைமறைவாகி வருவதே காரணம் என அரசின் தஞ்சக் கொள்கையை விமர்சிப்பவர்கள் தெரிவிக்கின்றனர்.

## பட்டி

சட்டவிரோதமாக பிரித்தானியாவுக்கு வரும் தஞ்சம் கோருவோருக்கு கைதிகளுக்கு கட்டும் எலெக்ரோனிக் பட்டிகளை கட்டுவது பற்றி அமைச்சர்கள் ஆலோசித்து உள்ளனர். தஞ்சம் கோருவோர் தலைமறைவாவதைத் தடுக்க இந்த பட்டி கட்டும் முறையை பயன்படுத்த ஆலோசிக்கப்பட்டு உள்ளது.

## பாதுகாப்பில்லை

தஞ்சம் கோருவோருக்கான மையங்கள் பாதுகாப்பற்றவை என தலைமை சிறை அதிகாரி தெரிவித்து உள்ளார். கார்மன்ஸ்வேர்த் திருப்பி அனுப்பும் மையத்தில் ஒழுங்கின்மை, சேதாரம், தப்ப முயற்சித்தல் என்பன பொதுவாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இங்கு வாரத்திற்கு 7 பேர் தாக்குதலிற்கு உள்ளாவதாகவும் ஒருவர் தன்னை காயப்படுத்திக் கொள்வதாகவும் தற்கொலைக்கு முயற்சிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மருத்துவர்கள்

தலைநகர் இலண்டனில் இருந்து பெருமளவு ஜிபி க்கள் வெளியேறுவதாலும் ஓய்வு பெறுவதாலும் அடுத்த 5 ஆண்டுகளுக்கு தேசிய சுகாதார சேவைகளின் நிலை மோசமடையும் என இலண்டன் அசம்பிளி தெரிவிக்கிறது. இதனை நிவர்த்தி செய்ய 255 ஜிபி க்கள் தேவைப்படுவதாக தேசிய சுகாதார அமைப்பு தெரிவிக்கிறது. ஆனால் தரமான சேவையை வழங்க 1500 ஜிபி க்கள் தேவை என Royal College of General Practioners மதிப்பிட்டு உள்ளது.

## சுத்தம்

அடுத்த ஆண்டு நடுப்பகுதி முதல் இலண்டனை சுத்தப்படுத்த 500 பயிற்சி பெற்ற பொலிஸ் அலுவலர்கள் 26 உள்ளாட்சிப் பிரிவுகளில் நியமிக்கப்பட உள்ளனர். இவ்வலுவலர்கள் நடைமுறையில் உள்ள குப்பைகளுக்கான சட்டவிதிகளை அமுல்படுத்த உள்ளனர். கடைகள், உணவகங்கள் தமது எல்லைக்கு வெளியே குப்பை போட்டால் அல்லது அசுத்தப்படுத்தினால் £2,500 வரை அபராதம் விதிக்கப்படும்.

## நிறை அதிகரிக்கிறது

சிறுவர்களின் உடற்பருமன் அதிகரிப்பது எச்சரிக்கப்பட்டு உள்ளது. பெற்றோர் தமது நடைமுறைப் பழக்கவழக்கங்களை மாற்றிக்கொள்வதன் மூலம் இதனைத் தடுக்கலாம் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். குழந்தைகளுக்கு சத்தான உடல்நலத்திற்கு உகந்த உணவுகளைத் தயாரிக்கும்படி சுகாதார அமைச்சர் உணவு உற்பத்தி நிறுவனங்களைக் கேட்டு உள்ளார். வறுமைக் கோட்டில் வாழும் சிறுவர்கள் உடற்பருமனால் அதிகம் பாதிக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

## தீங்கான கொழுப்பு

தீங்கு விளைவிக்கக் கூடிய கொழுப்புகள் நாளாந்தம் கொள்வனவு செய்யும் பொருட்களில் இருப்பதை சுப்பர் மார்க்கற்றுக்கள் பாவனையாளர்களுக்கு அறிவுறுத்தவில்லை என பாவனையாளர் அமைப்பு தெரிவித்து உள்ளது. இதய நோய்களை ஏற்படுத்தக் கூடிய Hydrogenated Oils பிஸ்கற், கேக், சொசேச் ஆகிய பொருட்களில் இருப்பதை சுப்பர் மார்க்கற்றுகள் பாவனையாளர்களுக்கு தெரியப்படுத்தவில்லை என அவ்வமைப்பு குற்றம்சாட்டுகிறது.

## தெருக் கொள்ளை

கார்களுக்கு விதிக்கப்படும் வரியில் 20 வீதம் மட்டும் தான் வீதிப் புனரமைப்புக்குப் பயன்படுத்தப்படுகிறது. பிரித்தானியத் தெருக்களில் ஆண்டுக்கு 3,000 பேர் மரணமடைகிறார்கள். ஆயினும் பிரித்தானிய தெருக்கள் ஐரோப்பிய, அமெரிக்க தெருக்களிலும் பாதுகாப்பானவை என்பது குறிப்பிடத்தக்கது.

## போத்தல் தண்ணீர்

பத்தில் ஒரு உணவு நஞ்சாதல் பாதிப்புக்கு போத்தல் தண்ணீரே காரணம் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். உணவு நஞ்சாதலால் 400,000 பேர் பாதிக்கப்படுகின்றனர். அவர்களில் 48,000 பேர் போத்தல் தண்ணீரை அருந்தியதால் பாதிப்புக்கு உள்ளாகியதாக ஆய்வு மதிப்பீடு தெரிவிக்கிறது.

## பொலிஸ் பாரபட்சம்

பொலிஸார் அவசியமில்லாமலே வேகமாகச் செல்வதாகவும், தடைவிதிக்கப்பட்ட இடங்களில் வாகனங்களை நிறுத்துவதாகவும் மோட்டார் வாகன அமைப்புகள் குற்றம்சாட்டி உள்ளன. பொலிஸார் தங்களுக்கு ஒரு சட்டம் மக்களுக்கு ஒரு சட்டம் என பாரபட்சமாக நடப்பதாக அவ்வமைப்புகள் குற்றம்சாட்டி உள்ளன.

## ஜப்பான் கார்கள்

ஜப்பானிய கார்கள் மிகத் தரமானவை அல்லது எல்லா விடயங்களிலும் அதிகமாக கொள்வனவுக்குரியனவாகத் தெரிவு செய்யப்பட்டு உள்ளது. சிறிய மினி கார்களில் Toyota Yaris, Yaris Verso & Skoda Octavia and Honda jazz ஆகியன சிறப்பிடத்தைப் பெற்றுள்ளன. Nissan Almera & Honda Civic ஆகியன சிறந்த குடும்ப வாகனமாகத் தெரிவு செய்யப்பட்டு உள்ளது. Nissan Primera பெரிய கார்களுக்கு சிறந்தவையாகத் தெரிவு செய்யப்பட்டு உள்ளது.

# சம்பளம்கோரி பகிஸ்கரிப்பு

தமிழ் வானொலியில் சில மாதங்களாக சம்பளம் கிடைக்காத பணியாளர்கள் பகிஸ்கரிப்பில் குதித்து உள்ளனர். இது பற்றித் தெரியவருவதாவது இலண்டனில் தலைமையகத்தைக் கொண்டு 24 மணிநேர தமிழ் ஒலிபரப்பை மேற்கொள்ளும் இவ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது ஊழியர்களுக்கு ஒப்பந்தப்படி சம்பளம் கொடுக்காததால் ஊழியர்கள் ஒருவாரம் பகிஸ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நிதி நெருக்கடியினாலேயே சம்பளம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டதாக பணியாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு உள்ளது. எங்களுக்கும் குடும்பங்களைப் பார்க்க வேண்டிய பொறுப்பு இருப்பதாகத் தெரிவித்த ஒரு பணியாளர் இந்த சம்பளத்தை நம்பியே வாழ்வதாக உதயனுக்குத் தெரிவித்தார். தனது அடையாளத்தை வெளிப்படுத்தாத அவர் வானொலிக்கு கஸ்டத்தை கொடுப்பது எமது நோக்கமல்ல எமது கஸ்டத்தை முகாமைத்துவத்திற்கு தெரியப்படுத்தவே பகிஸ்கரிப்பில் ஈடுபட்டதாகத் தெரிவித்தார்.

பகிஸ்கரிப்பில் ஈடுபட்டவர்கள் வானொலி நிகழ்ச்சிக்கு எந்த இடையூறும் ஏற்படத்தாமல் நிகழ்ச்சிகளை பதிவு செய்து வழங்கி இருந்தனர். ஆனால் அவானொலி நிலையத்தால் நடாத்தப்பட்ட இசை நிகழ்ச்சியில் பெரும்பாலானவர்கள் கலந்து கொள்ளவில்லை. இந்த சம்பளப் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்படும் என அப்பணியாளர் நம்பிக்கை வெளியிட்டார். தமிழ் ஊடகங்களில் நிதிநெருக்கடி என்பது பொதுவான விடயமாக இருந்தாலும் பணியாளர்கள் பகிஸ்கரிப்பில் ஈடுபட்டது இதுவே முதற் தடவை.

மேலும் தமிழ் அமைப்புகளில் முகாமைத்துவத்திற்கும் பணியாளர்களுக்கும் இடையே சுமூகமான உறவு இல்லாமல் இருப்பதும் அவை சில சமயம் மோசமடைந்து நீதிமன்றங்களுக்குச் செல்வதும் கடந்த சில ஆண்டுகளாக பொதுவான விடயங்களாக வருகிறது.

# பத்திரிகைகளை எறிந்தவர் மீது புகார் - முதல் மன்னிப்பு பெற்றார்

உதயன் பத்திரிகையை கடையில் இருந்து எடுத்து எறிந்தவர் பற்றி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டு உள்ளது. ஒக்ரோபர் 4ம் திகதி காலை குயின்ஸ்பறியில் உள்ள மாருதி கடையில் இருந்து உதயன் பத்திரிகையை எடுத்து எறிந்துள்ளார் ஒருவர். தனது ஐம்பதுக்களில் உள்ள இவர் தங்கராஜா என அடையாளம் காணப்பட்டு உள்ளார். ஊனமுள்ளவர்களுக்கான அட்டையை கொண்டிருந்த தங்கராஜா, தனது சில்வர் நிற கொன்டா காரில் வந்து இந்த கீழ்த்தரமான வேலையில் ஈடுபட்டு உள்ளார்.

வேலையற்றவர்களுக்கான உதவித்தொகையை பெற்றுக் கொண்டு ஈழபதீஸ்வரர் ஆலயத்தில் வேலை செய்யும் தங்கராஜா, கடைக்குள் சென்று கெட்ட வார்த்தைகளால் திட்டிவிட்டு உதயன் பத்திரிகையை அகற்றும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார்.

தங்கராஜாவின் நடவடிக்கைகளை நேரில் பார்த்துக் கொண்டிருந்த உதயனின் செய்தி ஆய்வாளர் கொன்ஸ்ரன்ரைன், காவல்துறையினரிடம் இது பற்றி ஒரு முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார். வயதான தங்கராஜா மீது உடனடியாக எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என தான் கேட்டுக் கொண்டதாகவும் எதிர்காலத்தில் மீண்டும் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றால் மீண்டும் முறைப்பாடு செய்வதாகவும் அப்போது நடவடிக்கை எடுத்தால் போதும் என்றும் கொன்ரன்ரைன் காவல்துறையினரிடம் கேட்டுக் கொண்டுள்ளார். தங்கராஜா பரிதாபத்தின் பேரில் முதல் தடவை மன்னிக்கப்படுகிறார்.

# ஒரு கோவில் இரு நிர்வாகம்

சர்ச்சைக்குரிய ஈழபதீஸ்வரர் ஆலயம் தொடர்பான பொதுக் கூட்டம் ஒன்று Alperton Community School ல் இடம்பெற்றது. ஆலயத் தலைவர் சிவராஜா இக்கூட்டத்தை ஏற்பாடு செய்து தனது கையெழுத்திட்டு அழைப்பு விடுத்திருந்தார். சமூகத்தின் முக்கிய பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

ஈழமக்களின் துயர்துடைக்க ஆலய நிர்வாகம் உதவவில்லை, ஆலயக் கணக்குகள் காட்டப்படவில்லை, கடந்த ஆண்டு பொதுக் கூட்டத்தை கலைத்தது, பிரித்தானிய சட்டத்திற்கு புறம்பான போலியான ஒரு நிர்வாகத்தால் ஆலயம் நடத்தப்படுகிறது போன்ற காரணங்களால் புதிய நிர்வாகத்தை தெரிவு செய்ய இப்பொதுக் கூட்டம் கூட்டப்படுவதாக தலைவர் சிவராஜா தனது பிரசுரத்தில் குறிப்பிட்டு உள்ளார்.

ஆலய வரவு செலவுகள் மாதாந்தம் அடியார்களுக்கு காட்டப்படல் வேண்டும், ஆலயத்தில் சேரும் பணத்தில் ஒரு பகுதி பெற்றோரை இழந்த ஈழத்து சிறார்களுக்கு அனுப்பப்பட வேண்டும், ஆலய உண்டியல் வீட்டிற்கு கொண்டு செல்லப்படாமல் அடியார்கள் முன்னிலையில் கணக்கிடப்பட வேண்டும், கோயில் நிர்வாகம் மக்களால் தெரிவு செய்யப்பட வேண்டும், சமூக நிறுவனங்களுக்கு ஆலயம் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும் போன்ற திர்மானங்கள் அன்றைய கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. சந்தர்ப்ப சுழ்நிலைகள் சரியாக அமையும் போது ஆலயத்தை இப்புதிய நிர்வாகம் பொறுப்பேற்கும் என மு சிவராஜா தெரிவித்தார். இக்கூட்டத்திற்கு மேயர் மனோ தர்மராஜா குத்துவிளக்கேற்றி துவங்கி வைத்தார் என உதயனுக்கு கிடைத்த செய்தி தெரிவிக்கின்றது.

# உரிமைகளுக்கு குரல் கொடுத்த குமார் காலமானார்

தொழிலாளர் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்த நடராஜா செந்தில்குமார் தனது 53வது வயதில் மாரடைப்பால் காலமானார். செப்ரம்பர் 18 அன்று அவரது அலுவலகத்தில் அவர் இவ்வுலகை விட்டு நீங்கினார். மூன்று குழந்தைகளின் தந்தையான இவர் மிகுந்த சமூக அக்கறை உடையவர். பல்வேறு தமிழ் அமைப்புகளிலும் இணைந்து தனது சேவையை வழங்கினார். போராட்டத்தையே வாழ்க்கையாக்கிய இவர் தஞ்சம் கோருவோர்களைத் திருப்பி அனுப்பும் பிரித்தானிய அரசின் நடவடிக்கைக்கு எதிராக நடத்தப்பட்ட போராட்டத்திலும் கலந்து கொண்டு குரல் கொடுத்தார்.

செப்ரம்பர் 24 அன்று இடம்பெற்ற குமாரின் இறுதிக் கிரியைகளில் நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர். தமது தந்தையின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட பிள்ளைகள் தந்தையை முன்னுதாரணமாக்கி வாழப்போவதாக அங்கு உறுதி எடுத்துக் கொண்டனர்.

உரிமைகள் மறுக்கப்பட்ட போது எல்லாம் குரல் கொடுக்கும் இவர் தான் பணி புரிந்த தமிழ் சமூக வீடமைப்பு கழகத்தில் இருந்து அநீதியாக நீக்கப்பட்ட போது போராடி சட்டத்தின் முன் வெற்றியும் பெற்றார். அதே முறையில் சக ஊழியர்களுக்கு அநீதி இழைக்கப்பட்ட போது அவர்களுக்கு உறுதுணையாக இருந்து அவர்களுக்கும் நீதியைப் பெற்றுக் கொடுத்தார்.

அவர் மீது சமூகம் காட்டிய அக்கறையை அவரது இறுதியாத்திரையில் காணக் கூடியதாக இருந்ததாக அங்கு வந்திருந்த சிவநேசன் தெரிவித்தார்.

# கனடாவில் மீண்டும் வன்முறை

கனடாவில் சிறிது காலம் ஓய்ந்து இருந்த வன்முறை மீண்டும் தலைதூக்கும் அச்சம் ஏற்பட்டு உள்ளது. ஒக்ரோபர் முற்பகுதியில் இரவுப் பாடசாலையில் தமிழ் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டதை அடுத்தே இவ் அச்சம் ஏற்பட்டு உள்ளது. மாலை 8:15 அளவில் அவசர சேவைகள் அழைக்கப்பட்டு இரத்த வெள்ளத்தில் இருந்த இளைஞன் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

For News & Advertising: 020 8952 5677 For Distributions : 020 8905 7775

# 'இந்தியா 2003' கண்காட்சி

டிசம்பர் மாதம் இந்தியா 2003 கண்காட்சி மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் உள்ள புத்திரா உலக வர்த்தக மையத்தில் இடம்பெற உள்ளது. வாகனங்கள், தொழிற்சாலை இயந்திரங்கள், மின் உபகரணங்கள், விவசாய உபகரணங்கள், துணி வகைகள், ஆடைகள், நகைகள், கைவினைப் பொருட்கள் என பல வகைப்பட்டனவும் காட்சிப்படுத்தப்பட உள்ளது.

இந்திய வர்த்தக ஊக்குவிப்பு அமைப்புடன், இந்திய அரசு, இந்திய துணி உற்பத்திக் கூட்டமைப்பு என்பன இணைந்து இந்தக் கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளன. 15 ஆண்டுகளில் மலேசியாவில் நடைபெறும் 2 வது பெரும் இந்தியக் கண்காட்சி இதுவாக உள்ளது.

# மலேசியத் தமிழ் தலைமைக்கு சவால்

தேசிய அரசியலில் புதிய முகங்களை கொண்டு வரவேண்டும் என்ற மலேசியப் பிரதமரின் ஆலோசனை மலேசியத் தமிழ் தலைமை பற்றிய சர்ச்சையைக் கிளப்பி உள்ளது. மலேசிய இந்திய காங்கிரஸின் தலைவர் டாத்தோ ஸ்ரீ சாமிவேலுவை நீக்கி புதிய தலைமையை உருவாக்க அக்கட்சியினுள் சிலர் செயற்படுகின்றனர். சாமிவேலு கடந்த 24 ஆண்டுகளாக தலைமைப் பதவியில் உள்ளார்.

வேலைத் துறை அமைச்சராகவும் உள்ள சாமிவேலு, கடந்த 20 ஆண்டுகளாக தன்னை தலைமையில் இருந்து தூக்க தவறிவிட்டனர் இனியும் முயற்சி செய்து அவர்களுடைய நேரத்தை விரயம் செய்ய வேண்டாம் என மலேசிய நண்பன் பத்திரிகைக்கு தெரிவித்த செய்தியில் கிண்டல் செய்துள்ளார்.

CEYLON SUPER STORE
புதிய தமிழ்க்கடை
Grocers & Convenience Store
அ: அரிசி மா
ஆ: ஆட்டாமா
இ: அட்டலிப்பட்டி
என A to Z போல்
Harrow மாநகரில் நாடவேண்டிய இடம்
Ceylon Superstore
308 East Cote Lane, South Harrow, HA2 9AH
Tel: 020 8 423 3444

## Drive Thru Nursery

காரில் இருந்தவாறே பிள்ளைகளை நேர்சரி ஆசிரியர்கள் ஏற்றுக் கொள்ளும் Drive Thru Nursery ஒன்று ஸ்ரொக்போட் என்ற இடத்தில் அடுத்த ஆண்டு முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட உள்ளது. 128 குழந்தைகளை பராமரிக்கக் கூடிய வசதி உள்ள இந்த நேசரியை அமைக்க தேசிய லொத்தர் நிதியில் இருந்து நிதி வழங்கப்பட்டு உள்ளது. கார் நிறுத்தும் கட்டுப்பாடுகள் நிறைந்த பகுதிகளில் இவ்வகையான நேசரிகள் வரவேற்கப்படுகின்றது.

WEMBLEY CARS
24 Hour - 7 Seater
020 8902 0123
All cars fully insured
Wembley's longest running company
வாகன சாரதிகள் தேவை.
வாரம் £500 மேல் கிடைக்கும்.
அஜிலன் 07799 472 550

## அமெரிக்கா மீது மீண்டும் தாக்குவோம்: பின்லேடன் எச்சரிக்கை

அமெரிக்கா மீது புதிய தற்கொலைப்படை தாக்குதலை நடத்துவோம் என்று அல்கொய்தா தீவிரவாத இயக்கத் தலைவர் ஒசாமா பின்லேடன் கடுமையாக எச்சரித்து உள்ளான்.

பின்லேடன் பேச்சு பதிவு செய்யப்பட்ட டேப்பை கத்தார் நாட்டு அல்-ஜஸீரா டெலிவிஷன் இதை ஒளிபரப்பியுள்ளது. அந்த டேப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள பின்லேடனின் பேச்சு விபரம் வருமாறு:-

அமெரிக்கா மீதும் ஈராக் தாக்குதலில் ஈடுபட்ட நாடுகள் மீது தற்கொலை படைத் தாக்குதல் நடத்துவோம். அநீதி இழைப்பதை அமெரிக்கா நிறுத்தும் வரை அந்த நாட்டின் உள்ளேயும் வெளியேயும் நாங்கள் தொடர்ந்து தற்கொலைப்படை தாக்குதலை நடத்துவோம். நாங்கள் தொடர்ந்து போராடுவோம்.

ஈராக்கிற்கு எதிராக செயல்பட்ட பிரிட்டன், ஸ்பெயின், ஆஸ்திரேலியா, போலந்து, ஜப்பான், இத்தாலி ஆகிய நாடுகள் மீது பதில் தாக்குதல் நடத்த எங்களுக்கு உரிமை உண்டு. இந்த தாக்குதலுக்கு உதவிய இஸ்லாமிய நாடுகள் மீதும் தாக்குவோம். குறிப்பாக குவைத் மீது தாக்குவோம்.

ஈராக்கில் இருந்து அமெரிக்க படைகள் உடனடியாக வெளியேற வேண்டும்.

இவ்வாறு அந்த டேப்பில் பின்லேடனின் பேச்சு பதிவு செய்யப்பட்டுள்ளது.

KS SATELLITE LTD.
Specialists in Satellite Installation
Wholesale & Retail
Deepam, TTN, Sun TV, Jaya TV, Sky Digital, Guru Maharaj, CCTV & Home Cinema and Plasma TV
Open 7 Days a week
Tel: 020 8597 2005
Mob: 07956 166 847
747, Eastern Ave., Newbury Park, Ilford IG2 7RT


LIGHTSTARS
YOUR LOCAL COMPUTERS SHOP
COMPUTERS FROM £399
COMPUTERS & ACCESSORIES AT LOW PRICES
SALES / SERVICES / UPGRADES / REPAIRS
WE SELL IBM COMPAQ, HP, LEXMARK, ETC.,
SAVE ££££
COMPUTER CLASSES ALSO AVAILABLE
CALL US ON 0208 905 7390
இது ஒரு தமிழ் நிறுவனம்

LISA TIMBER LTD.
Importers of Hardwood & Parquet Flooring
REAL WOOD FLOORING AT DISCOUNTED PRICE
Call
020 8961 9030
Unit 40, Cumberland Business Park,
Cumberland Avenue, Park Royal NW10 7RX

Jyoti Jewellers
NEWLY OPEN
We have religious Articles, Goddess Idle and many more in pure Sterling Silver
Unbeatable Price
Why not call in
020 8204 7483
519, Kingsbury Road, London NW9



# சிங்கள கடற்படை அட்டூழியம் : ராமேஸ்வரம் மீனவர்கள் மீது சரமாரி துப்பாக்கிசூடு ஒரு மீனவர் தலையில் குண்டு பாய்ந்தது



சர்வதேச கடல் எல்லையில் மீன்பிடித்துக்கொண்டிருந்த ராமேஸ்வரம் மீனவர்கள் மீது சரமாரியாக இலங்கை கடற்படையினர் துப்பாக்கி சூடு நடத்தியதில் மீனவர் ஒருவர் படுகாயமடைந்தார். மேலும் மற்ற மீனவர்களை துப்பாக்கி மற்றும் கம்பிகளால் தாக்கி மீண்டும் அட்டூழியத்தை அறங்கேற்றியுள்ளனர். ராமேஸ்வரத்தில் இருந்து நேற்று காலையில் தங்கச்சிமடத்தைச் சேர்ந்த வி.ஆர்.ஆனந்த் என்பவருக்கு சொந்தமான ஆர்.எம்.எஸ்.2299 என்ற விசைப்படகில் பிரபு(22) லிங்கம், யாக்கோப்பு, ரோஸ்லீஸ் ஆகிய 4 மீனவர்களும் இந்திய-இலங்கை சர்வதேச கடல் எல்லையில் மீன்பிடித்து கொண்டிருந்தனர். அப்போது மீன்பிடி வலை, அந்த படகில் இஞ்சின் இலையில் திடீரென இஞ்சின் இயங்காமல் நின்று போனது. உடனே அருகில் சென்ற மற்றொரு விசைப்படகை உதவிக்கு அழைத்து ராமேஸ்வரத்திற்கு இழுத்து செல்லும்படி கேட்டுக்கொண்டனர். அதன்படி பழுதான படகை கயிறால் கட்டிக்கொண்டு இழுத்து வந்து கொண்டிருந்த போது திடீரென ஏர்படகில் அங்கு வந்த இலங்கை கடற்படையினர் மீனவர்களிடம் விசாரணை நடத்தாமலும், முன் எச்சரிக்கை செய்யாமலும், காட்டுமிராண்டித்தனமாக கண்மூடிக்கொண்டு பழுதான படகு மீது இயந்திர துப்பாக்கியால் சரமாரியாக சுட்டு உள்ளனர். இதில், ஒரு குண்டு மட்டும் மீனவர் பிரபு என்பவரின் வலது தலைபகுதியில் துளைத்துக்கொண்டு வெளியேறியது. இதில், ரத்த வெள்ளத்தில் அலறிக் கொண்டு படகினுள் விழுந்தார்.

இதன்பின் மீனவருக்கு உதவி ஏதும் செய்யாமல் அங்கேயே விட்டு விட்டு இலங்கை கடற்படையினர் மறைத்து சென்றனர். இதன்பின் ரத்தத்தில் மிதந்த மீனவர் பிரபு-வை உடனே ராமேஸ்வரம் கொண்டு வருவதற்கு இழுத்து சென்ற படகை அழைத்து, படுகாயம் அடைந்த மீனவரையும், மற்ற 3 மீனவர்களும் மீட்பு படகில் ஏறி ராமேஸ்வரம் கரைக்கு நேற்று மாலை 5 மணியளவில் வந்து சேர்ந்தனர். துப்பாக்கியால் சுடப்பட்ட படகை அங்கேயே நங்கூரம் பாய்ச்சி நிறுத்தி வைத்துள்ளனர்.

இந்நிலையில் படுகாயம் அடைந்த மீனவர் பிரபுவை ராமேஸ்வரம் அரசு மருத்துவமனைக்கு தூக்கிச் சென்றனர். அங்கு டாக்டர்.தனசேகரன் சிகிச்சை அளித்தார். இது குறித்து தகவலறிந்தவுடன் ராமேஸ்வரம் மீன்துறை உதவி இயக்குனர் தங்கராஜ், தாசில்தார் அசுபதி, போலீஸ் துணை கண்காணிப்பாளர் கஜபதி, மீனவர் சுங்கத்தலைவர்கள் என்.ஜே.போஸ், தேவதாஸ் ஆகியோர் படுகாயம் அடைந்த மீனவரை பார்வையிட்டனர்.

இதன்பின் தீவிர சிகிச்சைக்காக மீனவர் பிரபுரவை மதுரை அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. கடந்த சில மாதங்களாக மீனவர்களை சிறைபிடித்தும், அவர்களது விலை உயர்ந்த இரால் மீன்களை கொள்ளையடித்து சென்ற இலங்கை கடற்படையினர் தற்போது காட்டுமிராண்டித்தனமாக துப்பாக்கியால் சுட்டிருப்பது மீனவர்களிடையே பெரும் பதட்டத்தை ஏற்படுத்தி உள்ளது. மேலும், நேற்று மாலையில் மீன்பிடிக்காமல் ஏராளமான விசைப்படகுகள் ராமேஸ்வரம் கரைக்கு திரும்பியது.

# இலங்கை ராணுவ தளபதிகளுக்கு சந்திரிகா திடீர் தடை பிநார்வே சமரச குழுவின் ஆலோசனைகளை ஏற்க வேண்டாம்

'நார்வே சமரச குழுவினர் ஆலோசனைகளை ஏற்க வேண்டாம் என்று இலங்கை முப்படை தளபதிகளுக்கும் சந்திரிகா திடீர் தடை உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## சமரச பேச்சு

இலங்கை ராணுவத்துக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டு 19 மாதங்கள் ஆகின்றன.

வடகிழக்கு மகாணத்திற்கு இடைக்கால நிர்வாகம் அமைக்க வேண்டும் என்று விடுதலைப்புலிகள் கோரிக்கை விடுத்தனர்.

இதையொட்டி புதிய சமரச திட்டம் தயாராகி வருகிறது. இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே சமரசம் ஏற்பட நார்வே சமரச குழு ஏற்பாடுகள் செய்து வருகிறது.

இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக புதிய சமரச திட்டத்தில் சில மாறுதல்களை செய்து விடுதலைப்புலிகள் இந்த வாரத்தில் இலங்கை அரசிடம் அறிக்கை தாக்கல் செய்ய இருக்கிறது.

ராணுவ தளபதிகளுக்கு சந்திரிகா

## திடீர் தடை

இந்த நிலையில் இலங்கை முப்படை தளபதிகளுக்கும் இலங்கை அதிபர் சந்திரிகா 'திடீர் தடை விதித்துள்ளார்.

'நார்வே சமரச குழுவினரின் ஆலோசனைகளை ஏற்க வேண்டாம் என்று அந்த தடை உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இது சம்பந்தமாக ராணுவம், கப்பல், விமானப்படை தளபதிகளுக்கு சந்திரிகா ஒரு கடிதம் எழுதியுள்ளார். அந்த கடிதத்தில் இந்த 'திடீர்பீ தடை உத்தரவை அவர் பிறப்பித்து இருக்கிறார்.

முப்படை தளபதிகளுக்கும் தடை உத்தரவு பிறப்பித்த 24 மணி நேரத்தில் சந்திரிகா நார்வே பிரதமர் கஜேல் மக்னேக்கு ஒரு கடிதம் எழுதி உள்ளார். அதில் 'நார்வே சமரச குழு தலைவர் டெல்லேப்செனை பதவியில் இருந்து நீக்குங்கள்பீ என்று குறிப்பிட்டுள்ளார்.

நார்வே சமரச குழு தலைவரின் செயல்பாடுகளில் இலங்கை அரசுக்கு திருப்தி இல்லை. அவர் ராணுவ ரகசியங்களை விடுதலைப்புலிகளுக்கு தெரிவித்து வருகிறார் என்றும் அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு உதாரணமாக சமீபத்தில் நடந்த சம்பவம் ஒன்றையும் சந்திரிகா இந்த கடிதத்தில் எழுதி உள்ளார்.

## குற்றச்சாட்டு

சமீபத்தில் விடுதலைப்புலிகளின் கப்பல் ஆயுதங்களை கடத்துவதாக தகவல் கிடைத்தது. அந்த கப்பலை பிடிக்க ராணுவம் நடவடிக்கை மேற்கொண்டது. ஆனால் நார்வே சமரச குழு இதுபற்றி விடுதலைப்புலிகளுக்கு தகவல் கொடுத்து விட்டது. இதனால் விடுதலைப்புலிகளின் ஆயுத கடத்தல் கப்பலை இலங்கை ராணுவத்தால் பிடிக்க முடியவில்லை என்றும் அதில் குற்றம் சாட்டி இருக்கிறார்.

ADVERTISEMENTS


# HARTEX

ESTABLISHED 1969

THE GREAT OUT DOORS

- COMBAT · PULLOVERS · MAP CASES · THERMAL UNDERWEAR
- RAINWEAR · BODY WARMERS · SHORTS · COMPRESSORS BAGS
- CLOTHING · BOOTS · COOKWARE · MONEY BELTS
- HIKING BOOTS · HAMMOCKS · CUTLERY SETS
- GLOVES · HEADWEAR · PLATES · WEBBING · HIKING BOOTS

Competitive prices

55 VICTORIA ROAD
RUISLIP MANOR
MIDDX, HA4 9BS
TEL: 01895 634244

321 NORTHOLT ROAD
SOUTH HARROW
MIDDX, HA2 8JA
TEL: 020 8864 3333

OPEN 7 DAYS








# amj
DECORATING SUPPLIES

Landlord HUGE SAVING

## North West London's Newest Decorating Suppliers

DIRECT TO THE PUBLIC All Top Brands Available, including:
·Dulux ·Leyland ·Crown ·Johnstones ·Sadolin etc
·Quality Service ·Knowledgeable Staff ·Delivery Service

Save £££'s PLUS SUBSTANTIAL TRADE DISCOUNTS GIVEN



PLASTER
MOULDINGS
WALLPAPER

FREE DELIVERY

020 8 200 7575
Fax: 0208 200 1112
155 Church Lane, Kingsbury, London NW9 8JU
(opposite "The George" public house)

OPENING TIMES
Mon-Fri 6.30am - 4.00pm
Sat - 7.00am - 1.00pm



**UDHAYAN HOT NEWS CALL 020 8952 5677**



தீராத உங்களின் மன வேதனைகள் தீர்ந்திட, உங்களின் வாழ்க்கையில் என்றும் வெற்றி கண்டிட தரிசியுங்கள் அன்னையை

020 8905 7775,
020 8952 7775



## Highlife Construction Ltd

Loft Conversions/Rear Extensions for life and General Building Works

Contact: Siva

Mobile: 07710 505 437

77 Herent Drive
Ilford Essex IG5 OHF



நாளொன்றிற்கு £25 வீதம் மாதம் 6 நாட்கள் வரை நிரந்தரமாக வேலை வேண்டுமா?

020 8952 5677



# Euro Glazing

*Windows, Doors, Porches, Conservatories*

Service Quality Value

உயர்ந்த தரம், நிறைந்த சேவை மற்றும் மிகுந்த சேமிப்புக்கு நாடுங்கள்
020 8574 9494





We give guarantee for our quality products ranges we supply.
Our professional staffs are highly skilled to fit Windows, Doors, Porches, Conservatories.
Just one call away to make your home complete
Unit 7, Barrett Industrial Park, Park Avenue, Southall, Middlesex UB1 3AF
Tel: 020 8574 9494 Fax: 020 8574 8989



# NESAN Cash & Carry

NEWLY OPENED — MANY OPENING OFFERS

- * இலங்கை மரக்கறி வகைகள், நிரு. யாழினி, லீலா, TRS தயாரிப்புகள், சமுத்திரா, யாழினி கடல் உணவுகள் யாவும் குறைந்த விலையிலும்
- * திருமண ஆடை அலங்காரங்கள் வாடகைக்கும்
- * மேலும் பிரதி வாரமும் அதிவிசேட விலைக்கழிவில் பொருட்களும் உண்டு

SPECIAL OFFERS EACH WEEK

* ஒடியோ கேஸட், C.Dக்கள் விற்பனைக்கும் உண்டு

வாருங்கள்

**Tel: 020 8574 4018**

**217 The Broadway Southall**



DUBAI SPECIAL OFFERS

3 NIGHTS OFFERS
3★ Golden Sands Apts. £299
4★ Oasis Beach Resort £354
5★ Taj Palace £354
5★ Jumeirah Beach £439
www.traveldubai.co.uk

7 NIGHTS OFFERS
4★ Metropolitan City £364
Beach Access
5★ Jebel Ali £439
Inc Flights, Transfers & Breakfast (not inc Golden Sands). Limited availability. Conditions apply. Departures upto 24 AUG.

# AIR TRAVEL Corporation
0870 748 7474
www.airtravelcorp.co.uk

WORLDWIDE FLIGHTS

| | |
|---|---|
| Madras £419 | Columbo £364 |
| New York £234 | Mumbai £319 |
| Orlando £419 | Nairobi £399 |
| Los Angeles £379 | Singapore £369 |

CALL FOR OTHER DESINATIONS
Plus taxes. Early July Departures. Limited availability. Conditions apply.

Air Travel Corporation, Hammond House, 2 Bonnersfield Lane, Harrow, Middlesex HA1 2JR. sales@airtravelcorp.co.uk www.airtravelcorp.co.uk Agents for ATOL protected holders TTA R454X